144

ஞானபதி—சிவநாமஞ்சரி

இங்ஙனம்
சாம--வெங்கடரமணதாஸ்.
இ. வி, பி.
கோயமூத்தூர்

உ

சிவமயம்.

ஸ்ரீதண்டபாணிதுணை.

திருப்பழனிமலையிலெழுந்தருளிய

தண்டாயுதக்கடவுள்பேரில்

# ஞானரசகவிதாமஞ்சரி.

இஃது

பழனுபுரியில்வசிக்கும்.

மு- சீவலாசாரியார்

அவர்கள்குமாரர்.


## மௌனகுருருத்திரமூர்த்தி

ஆசாரியாரவர்களால்


இயற்றப்பட்டு.

மேற்படியூர்

சங்கீதவித்துவான்

**வல்லவசாஸ்திரியாரவர்களால்**

இராகதாளங்கள்பரிசோதித்து


சித்தூர்

**வீராசாமிநாயுடு- அவர்களது**

வித்தியாவிநோத அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதி௵.

1880

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

# புத்தகவிளம்பரம்.

இந்நூலாசிரியராலியற்றி யச்சிற்பதிப்பித்த வேதாந்தகீதாசம் முருகேசப்பதிகம் ஞானரசதீபிகை ஆனந்தரசம் இப்புத்தகங்களும் இனிமே லச்சிடப்படு மிதனடியிற் கண்ட புத்தகங்களும் - இன்னம் பலவிதமான தெலுங்குத் தமிழ்ப் கிரந்த புத்தகங்களும் தேவை யானவர்கள் கோயமுத்தூரிற் பெரியகடை வீதியில் நூதனமாகப் புத்தகக் கடை வைததிருக்கும் எங்களிடத்தில் விலைக்குப்பெற்றுக்கொள்ளலாம.

இனிமேலச்சிடும்புத்தகங்களாவன.

பழனிக்குறவஞ்சி
ஆனந்தகீதாமிருதசாரம்
பதிகத்திரட்டு
ஞானரசத்தென்பாங்கு
தங்கப்பிரபந்தம்
சிலகவித்திரட்டு
பெரியநாயகியம்மன்பதிகம்
காமாக்ஷியம்மன்பஞ்சரத்தினம்
கோசலைவிநாயகமாலை
இராமாயணஒயிற்கொம்மிப்பாட்டு
அரிச்சந்திரன்சோபனப்பாட்டு

☞ சி-வீராசாமிநாயுடு.
பு-வெங்கடாசலமுதலி.

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

# சிறப்புப்பாயிரம்.

இஃது.

சாமக்குளம்-அப்புலிங்கசுவாமிகளின்மாணாக்கராகிய - கோ-சு-வாப - அ - வெங்கிட்டரமணதாசரியற்றியது.

கானவர்கள்கனியதனையணைந்தகுகன்
மீதுவிரிகாசிவாசிவோர்
ஞானமுடனேநிதமும்போற்றிபுரிந்தேமி
கவுநலமுற்றோங்க
தேனிகரில்ஞானரசகவிதமஞ்சரியென
வேதெளித்தான்காணும்
வானவரும்புகழ்மௌநகுருருத்ரமூர்
த்தியெனும்மறைவலோனே.

திருப்பழனுபுரி

## அ-வீரப்பமுதலியார்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

முத்திதருந்தென்பழனிமலைக்குமரனிருசாணமுளரியின்பார்
சுத்தமிகுமெய்ஞ்ஞானரசகவிதாமஞ்சரிநற்றொடையல்சூட்டி
யெத்திசையோருந்துதிக்கத்தக்கபுகழ்படைத்தனனலென்றுந்தெய்வ
பத்திதனிலுயர்மௌனகுருருத்ரமூர்த்தியெனும்பாவலோனே

பழனிபுரியில்வசிக்கும்

## மூ-இரத்தினகிரிநாவலர்

அவர்களியற்றியது.

இரட்டையடியாசிரியவிருத்தம்.

கார்கொண்டகடலாடைபுனைகின்றதிவ்யநய
காசினிமடந்தைநுதலிற்
கவினுலவவணிதிலகமெனுமினியகழனிமலி
கமழ்பழனிமலைமீதுறை
சீர்கொண்டசெழுஞானசாக்ஷாத்பரப்ரம்ம
தெண்டாயுதக்கடவுண்மேற்
செந்தமிழில்ஞானரசகவிதாமஞ்சரியெனுந்
தெரியலன்பொடுபுனைந்து
ஏர்கொண்டநீடூழிகாலவரையெங்கணு
மிலங்குபுகழ்பெற்றோங்கினன்
எண்டிசைமதிக்கின்றதருமசீலன்மாத
ரெழில்மடலிலெழுதுலோலன்
பார்கொண்டபரசமயகோளரிபதம்பரவு
பலகலைவிநோதசெல்வப்
புண்பிலகுமௌனகுருருத்ரமூர்த்திக்கவிப்
பாரகெம்பீரமுகிலே,

———*———

பழனித்தாலூக்காவக்கீல்

## வே-கிருஷ்ணசுவாமிநாயக்கர்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அண்டர்முனிவோருய்யச்சூர்குலத்தைத்தடிந்தமுருகையன்மீது
தண்டமிழால்ஞானரசகவிதாமஞ்சரியன்பாய்ச்சாற்றிமென்மேல்

மண்டலமெண்டிசையோரும்நீடூழிகாலவரைமதிக்கப்பெற்றான்
கொண்டல்தனைநிகர்மௌனகுருருத்ரமூர்த்தியெனுங்கோமான்றானே.

பழனித்தாலூகா-பொருளூர்கிராமம்

கனகசபை.

# வெங்கடாசலக்கவிராயர்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

கறங்குதிரைக்கவினருவிச்சிவகிரிச்சண்முககுகன்மேற்கனிந்துக்ரனோர்
கறங்குதிரைக்கரண்ஞானரசகவிதாமஞ்சரிப்பூங்கவிசெய்தானீள்
கறங்குதிரைக்கணப்திகடுதிகொள்விஸ்வப்ரம்மகுலங்கதிப்பவெல்லோக்
கறங்குதிரையாமௌனகுருருத்ரமூர்த்தியெனுங்கலைவலோனே.

மேற்படிதாலூகா-புளியம்பட்டிகிராமம்

மூனிசீபுநாட்டாண்மை.

# கு-பழனிச்சாமிக்கவுண்டர்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

சீருலவும்பழனிமலைத்தேசிகன்மேற்பாவிசையாழ்செழிப்புற்றோங்கப்
பேருலவும்ஞானரசகவிதாமஞ்சரியெனுமோர்ப்ரபந்தந்தன்னை
யேருலவுமௌனகுருருத்ரமூர்த்திக்கவிஞனினிதாய்ச்சூட்டிப்
பாருலவுங்கல்விவள்ளச்சேற்றிநீடுபுகழ்படைத்தான்மாதோ.

ஷை-புளியம்பட்டிகிராமம்

கணக்கு

## ரு-பழனியப்பபிள்ளை

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

உம்பருலகம்முதலாயீரேழுவுலகமுமேயுவப்பாய்ப்போற்றக்
கும்பமுலைவள்ளிதெய்வயானைமகிழ்மகிணனெனுங்குமரேசன்மே
லின்பமுடன்ஞானரசகவிதாமஞ்சரியொன்றுவியற்றினனாற்
கம்பருக்குநேர்மௌனகுருருத்ரமூர்த்தியெனுங்கலைவலோனே.

———*———

பழனி மாநகரம்.

## சி-சிவசுந்தரமூர்த்திஆசாரியார்

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலாசிரியவிருத்தம்.

வானவர்சேனாபதியாஞ்சிவகிரிவாழ்சுப்ரமண்யவரதன்றன்மேல்
ஞானரசகவிதாமஞ்சரியெனுமோர்பிரபந்தம்நவின்றான்மிக்கத்
தேனருவிச்சோலைகள்சூழ்தென்பழனிமாநகரிற்சிறப்புற்றோங்கும்
பானலமென்மொழிமௌனகுருருத்ரமூர்த்திதமிழ்ப்பாவலோனே.

ஷை-புளியம்பட்டிகிராமம்

உபாத்தியாயர்.

## வெங்கடாசலம்பிள்ளை

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

திங்கள்புனையுஞ்சடிலச்சிவபெருமான்றன்னருள்சேர்செவ்வேடன்மே
ற், புங்கமிகுஞானரசகவிதாமஞ்சரியினிதாய்ப்புகன்றான்மிக்க

ங்கள்ஞ்சேர்பழனிநகர்வளர்விஸ்வப்ரம்மகுலவள்ளலோங்குந்
துங்கதமிழ்வலன்மௌனகுருருத்ரமூர்த்தியெனுந்துரைச்சிம்மமேறே.

———*———

கோயமுத்தூர்ஜில்லா-அவிநாசியில்வசிக்கும்

தங்கமுத்துக்கவிராயரவர்கள்.

மாணாக்கருளொருவராகிய

மேற்படியூர்.

## இரா-வெங்கடசாமிமுதலியார்

அவர்களியற்றியது.

எண்சீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்.

காணரசநவில்கணகவளிகளார்க்கக்
　கள்ளொழுகுநீபமலர்க்குமான்மீது
மோனரசமிகுந்தபாவினங்களாக
　முகில்மௌனகுருருத்ரமூர்த்திசூட்டும்
ஞானரசகவிதாமஞ்சரிகேட்டின்று
　நற்றிருமால்வெட்கவமுதளித்தானென்றே
வானரசரொடுபுலவர்மகிழ்ந்தானந்த
　வாரிதியிற்படிந்துபுகழ்வழங்கினரே.

{ பழனிபுரியில்வசிக்கும்-தமிழ்ச்சக்கரவர்த்தியாகிய-மகா-ஈ-ஈ-ஸ்ரீ
மு-மாம்பழக்கவிச்சிங்கநாவலரவர்கள்மாணாக்கருளொருவராகிய }

ஆயபுரியிலிருக்கும்

## இராமலிங்கக்கவிராய

ரவர்களியற்றியது.

நிலமண்டில ஆசிரியப்பா.

ஆதியாயனாதியா-யற்புமயமாய்ச்
சோதியுருவாய்த்-துலங்குந்திருவாய்ச்

சின்மயவெளியாய்த்-தேசிகவொளியாய்க்
கன்னலீன்ற-கவின்மணிமுத்தும்
வாணிறப்பணிலம்-வழங்கிடுமுத்துங்
கானுறுவனசங்-கவின்மணிமுத்தும்
வெண்கதிர்விரித்தவில்-வெறிவிரிகுமுதந்
தண்மதியென்று-தயங்கியலர்ந்திடுந்
தடஞ்சூழ்சிவகிரி-தன்னிலமர்ந்த
கடகளிற்கிளைய-கந்தநாயகன்மேற்
பத்தர்போற்றும்-பழனுபுரிவா
ழத்தேயத்தரு-மிசைத்துப்புகழ்சொலும்
விஸ்வப்ரம்ம-வியன்சேர்குலாதிபன்
நிஸ்பாபஞ்ச-விமலசோதியைக்
கனவிலுமறவாக்-கனயோகவிற்
பணமிகுதீரன்-பரிமளதோளன்
பொருளினிற்குபேரன்-போலவேவிளங்குந்
தெருளுறுங்கல்வியிற்-றேர்ந்தவிவேகன்
வேளைங்கர்த்த-வேலாசாரியர்
நாளுமியற்றிய-நலமிகுந்தவத்தா
லுதித்தசர்க்குண-னுத்துங்கசுமுகன்
கதித்தெழுகல்விக்-கடல்தனையுண்டோன்
மௌனகுருருத்திர-மூர்த்திக்கவிஞன்
மௌனசாதனத்தின்-வளமெலாமெடுத்து
மோனத்துதியாய்-மொழிந்தபுகழ்சேர்
ஞானரசகவிதா-மஞ்சரியென்னு
மொப்பருநூலை-யுலகெலாம்புனையே
செப்பருங்கல்விச்-சென்னையச்சதனிற்
கற்றவர்மற்றவர்-களிப்புடன்மகிழப்
பற்றுடன்பதித்துப்-பண்புபெற்றனனல்
பராங்கத்தினிலும்-பான்மைமிகுந்த
சிராங்கநகராஞ்-சென்னையைச்சார்ந்த
பூமகள்திலகப்-புன்னைப்பாக்கம்
பூமகள்விலாசப்-புண்ணியசீலன்

மெச்சுந்தியாகன்-மேன்மைபடைத்த
லச்சுமணமகிபன்-நற்றவத்துதித்தோன்
உரோருகமாத-ருணர்வுழிந்தருகச்
சரோருகாநநன்-தமனியதேகன்
சந்தனம்புனுகு-சவ்வாதுறையும்
மந்தரதோளன்-மணிதருவள்ளல்
மங்களமேவும்-வண்மைசேர்கிரீடி
வெங்கடாசலதிட-விற்பனமாலே.

சிறப்புப்பாயிரம்
முற்றிற்று.

உ.
ஸ்ரீதண்டபாணிதுணை.

பழனி
சிவசுப்பிரமண்யக்கடவுளின்பேரில்
பழனித்தாலூக்காவக்கீல்

# வெ-கிருஷ்ணசுவாமிநாயக்கர்

அவர்களியற்றியது.

மிட்டாய்க்கண்ணி-இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

அதிசயமானமிட்டாயிருக்குது அனுபவிப்பவர்களுண்டானால்
அழகுறுபழனியங்கிரிமிசைமேவிய அற்புதமானமிட்டாயி

சரணங்கள்,

மதிவுனேயீசன்மகிழ்ச்சுதனெனவரும்மதுரரசமிகுமிட்டாயி
கதியெனுமமரர்க்கிடர்தவிர்த்தாண்டகருணைப்ரவாகமிட்டாயி (அதி)
குருமுனிக்கன்றுபதேசித்தருளியகோதிலாவமிர்தமிட்டாயி
அருமறைமுடிவில்நடனதேசோமயமானந்தமானமிட்டாயி (அதி)
கனியொடுதேன்பாற்கற்கண்டுசீனிகலந்தநற்கருணைமிட்டாயி
பனிமலர்கமழ்திருப்பரங்கிரியதனிற்பண்பாய்ச்சமைந்தமிட்டாயி (அதி)
மதாகவிகிருஷ்ணசாமிமனமகிழவரமருளியநன்மிட்டாயி
நிதியுலவியதிருவாவினன்குடியெனுங்கீழிலிருக்குமிட்டாயி (அதி)

மிட்டாய்க்கண்ணி-முற்றிற்று.

———*———

௨

ஸ்ரீதண்டபாணி துணை.

# ஞானரசகவிதாமஞ்சரி.

காப்பு.

எண்சீர்க்கழில்நெடிலடியாசிரியவிருத்தம்

திருவளரும்பழனிமலைக்கந்தநாத
தேசிகதண்டாயுதவேற்குமரன் மீது
பருவமிகுஞானரசகவிகளாகப்
பைந்தமிழால்மஞ்சரியொன் றினிதுசூட்ட
சருவபரிபூரணவகண்டாகாரச்
சச்சிதானந்தவடிவாகவோங்கும்
கருமையொடுமதம்பொழிகுஞ்சரமுகத்துக்
கணபதிபொற்சரணமலர்காப்புத்தானே

வழிபடுகடவுள்வணக்கம்,

கட்டளைக்கலித்துறை.

மந்தாரைசண்பகமாமலர்சூடியவள்ளியிடம்
வந்தாதிநாளிற்குறவேடம்பூண்டுமணம்புரிந்து
சிந்தாகுலந்தவிர்த்தன்பரைக்காத்துத்திகழ்வடிவேற்
கந்தாவெனக்குவரந்தாமதுரகவிசொலவே

பரசிவவணக்கம்,

விருத்தம்.

காலனையன்று மார்க்கண்டன் றனக்காய்க் கடிதினில் வீழ்ந்திடவுதைத்து, மாலயன் காணாத்திருமலரடியையவழங்கிநற்கதிபுரிந்தாண்டு-ஞாலமும்போற்றவளர்சிவபெருமான்நவில்மறைதொழும்பதமலனைச் - சீலமாயென்றுந்துதித்துமேதுடருந்தீவினைதனைத்துலைத்துய்வாம்.

உமையவள்வணக்கம்,

விருத்தம்.

தானவர்கிளையைத்தடிந்திடவேலாய்ச்சண்முகநாதன்கைபுக்கி-வானவரிடுக்கந்தனைமறுத்தாண்டவாலையம்பிகை கௌமாரி - ஞானபூரணியாம்பெரியநாயகிபொன்னுதநூபுரபதமலனை நானில்மீதுமிகப்பணிந்தேற்றிநற்கதிபெற்றுவாழ்ந்திடுவோம்,

விஷ்ணுவணக்கம்.

விருத்தம்.

கடல்தனைக்கடைந்துவமுதமேதிரட்டிக்கற்பகநாட்டினரோவர்க்கும் - அடலுடன்நாளளித்துமேகாத்தவாதிமெய்ஞ்ஞானசொரூப - திடமிகும்ரங்கநாயகன்வனசச்செழுமலரடியிணைப்பணிந்து-படிமிசைசூழும்பந்தபாசத்தின்பவமதையொழித்துவாழ்ந்திடுவோம்.

அவையடக்கம்.

விருத்தம்,

கானல்தனில்மயிலாடக்கண்டிருந்தவான்கோழி கருதியாடும் - பான்மையெனக்கவிராஜபண்டிதர்முன்புன்சொலினைற்பாலன்யானும் -வானவர்கள்பணிந்தேத்துஞ்சிவகிரித்தண்டாயுதன்மேல்வழுத்தல்செய்த-ஞானரசகவிதாமஞ்சரியேற்றுமதனையெனநலங்கொள்வாரே.

---

கீர்த்தனங்கள்.

க - தோடையம்.

இராகம்-நாட்டை-தாளம்-ஜம்பை-கண்ணிகள்.

சதுர்மறைநடனபாதன்-சரவணோற்பவநீதன்
மதுரிதவிற்பனபோதன்-மலரடியைவாழ்த்த-ஆ-ஆ
துதிபாவுகனசுமுகன்-துளப்மலர்மால்மருகன்
அதுலகணபதிகனக-வடிமலர்கடுணையே-ஜெய-ஜெய
வன்னகலபமயூரன்-வளர்பன்னிருகரவீரன்
சின்மயசவிவிஸ்தாரன்-சேந்தன்புகழ்கூற-ஆ-ஆ
சன்னதக்ருபாலோலன் சருவவியாபகசீலன்
சொர்ணமயபரமசிவன்-றூயபதம்பணிவாம்-ஜெய-ஜெய
சந்தனகளபதோளன் சரசவள்ளிமணவாளன்
சுந்தரசண்முகவேளன்-துதிதனைக்கொண்டாட-ஆ-ஆ
மந்தாதனமிலங்கும்-மதிமுகவிம்பநிலங்கும்
அந்தரிபவானிதிரு-வடிமலரைத்துதிப்பாம்-ஜெய-ஜெய
கனகமயகலியாணி-கருணைத்தண்டாயுதபாணி
யநகன்மலரடிபேணி-யனுதினமும்போற்ற ஆ-ஆ
மனதிலுறைதமிழ்வாணி-வன்னமணமலர்வேணி
தனதுதிருவடிமலரைச்-சந்ததமுந்தொழுவாம்-ஜெய-ஜெய

உ-மங்களம்,இராகம்-சுருட்டி-தாளம்-சாப்பு

பல்லவி.

மங்கள மங்களம் - ஜெய-சுப
மங்களமங்களம்.

அநுபல்லவி,

அங்குசபாசந்தனைச்-செங்கையிற்கொள்ளும் ஞான
அங்கவிநாயகர்க்கும்-மங்கைவல்லபைக்கும் (மங்களம்)

சரணங்கள்.

வானவர்களின்சிறை-தானுமீட்டியமுரு
கோனுக்கும்வள்ளிதெய்-வானைமின்னாருக்கும் (மங்களம்)
பிரகதீஸ்பரனுக்கும்-பெரியநாயகியார்க்கும்
அரிகோதண்டபாணிக்கும்-அருகில்வாழ்சீதைக்கும் (மங்களம்)
சந்ததமிக்கவி-வந்தித்துப்புகழ்வோர்க்குஞ்
சுந்தரமயிலுக்குஞ்-தூய்வடிவேலுக்கும் (மங்களம்)

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்

பல்லவி.

நம்பினேனுன் செம்பொற்பாதம்
ரட்சித்தருளவேணுமே

அநுபல்லவி.

அம்புவியுளோர்க்கின்பமுதவுமத்வைதகருணாகரா
தும்பிமுகவன் தம்பியாய்வருசுப்ரமண்யகுணாகரா (நம்பினே)

சரணங்கள்.

அந்திபகலும்பந்தபாசம்விட்டகலவில்லைநானெனன் செய்வேன்
வந்துனதருள்தந்தடிமையின்மனத்துயர்களைந்தோட்டுவோன் (நம்)

முருகாவெனமுன்னுருகியமங்கைமுன்வந்துக்ருபைசெய்தவா
அருமையுடனுன்னிருபதந்தந்து வருள்செய்தென்றனையாளவா (ந)

பன்னிருவிழிதன்னிலொன்றினாற்பாராததென்னநீதியோ
சின்னஞ்சிறியேன்றன்னைச்சோதனைசெய்திடநான் விரோதியோ (ந)

மௌனகுருருத்ரமூர்த்திவாழ்த்திடும்பொற்பாதனே
சௌனகாதியர்போற்றும்பழனிச்சண்முகானந்தநாதனே (நம்பி)

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தவேளைவந்தாகாவையனே-வடி
வேற்கையனே-இந்தவேளை

அநுபல்லவி.

இந்திராதிதேவர்போற்று-மெந்தையேசண்முகதேவா
எந்தவிதமுந்தொண்டனே-யீடேற்றும்மஹானுப்பாவா (இந்தவேளை)

சரணங்கள்.

வள்ளிதெய்வயானைலோலா-வச்சிரகூர்வடிவேலா
புள்ளிமயிலேறுஞ்சீலா-புண்யகாருண்யவிசாலா (இந்த)
வாடிப்புண்ணுகுதேநெஞ்சம்-மதலைநானுன்றன்றஞ்சம்
பாடித்தொழுமென்மேல்வஞ்சம்-பண்ணாதேமாயாப்ரபஞ்சம் (இ)
மௌனகுருருத்ரமூர்த்தி-விழுத்துந்தமிழ்க்குமெய்யா
மனதில்நினைத்தபடி-வாமதுபுரிந்தாதுய்யா (இந்தவேளை)

இராகம்-மோஹனகல்யாணி-தாளம்-அடைதாளச்சாப்பு.

பல்லவி.

ஏழையைக்காப்பதுன்பாரம்-வா
எந்தையேசண்முகதேவாயிந்நேரம்

அநுபல்லவி.

தாழாதகலியினற்-றயங்குதேநெஞ்சந்
தளாவிடாதேயுன்-றுண்மலர்தஞ்சம் (ஏழையை)

சரணங்கள்.

துஷ்டனென்றெண்ணக்கூ-சோரவிடாதே
கஷ்டம்பொறுத்திலேன்-கந்தாவிப்போதே (ஏழை)
பல்லாயிரந்தரம்நான்-பண்ணினுக்குத்தம்
எல்லாமுன்மனப்பொறுத்-தின்பருள்நித்தம் (ஏழை)
என்னசொல்லியுமன-திரங்காததேனோ
வன்மம்வைத்திடச்சிறு-வனுமெதிர்தானோ (ஏழை)
பத்தன்மௌனகுரு-ருத்திரமூர்த்தி
நித்தமும்பணிந்தேற்றுங்-கர்த்தனேபோற்றி (ஏழை)

இராகம்-உசேனி-தாளம்-மட்டையம்.

பல்லவி.

கதிர்வேன்முருகா-நம்
கதிதாவிதுததிகடைக்கண்பார்

அநுபல்லவி.

சதிசெயமோதும்வி-சாசரர்சங்கக்
தணைத்தடிந்தன்பரைத்-தான்காத்திவுத்துங்க (கதி)

சரணங்கள்.

சந்ததமும்மூன்றன்-பொற்
சரணந்தொழு-மென்றன்மீதினிற்க்ருபை
எந்தவிதமுங்கிஞ்-சிற்றுமில்லாவிடில்
எப்படியிப்புவி-தன்னிற்பிழைத்துய்வேன் (கதி)
மாயாப்ரபஞ்சத்தில்-நான்
வலையிற்சிக்கிய-மான்போற்றியங்கிறேன்
நீயாவதித்தரு-ணத்தில்வந்தென்றன்முன்
நின்றாகூஷிக்காவி-டிலார்துணைசொல்வாய் (கதி)
வற்மநோய்துன்பம்-நிதம்
வந்துமயக்கி-வருத்துதற்கென்செய்வேன்
தற்மமோவிவ்வேளை-தன்னிற்பராக்காய்த்
தானிருந்தால்வேறு-திக்கிங்குண்டோசொல் (கதி)
தனமாதுலாவுஞ்-சீர்
தங்கும்பழனிம-லைத்தண்டபாணியே
மௌனகுருருத்ர-மூர்த்திதாசன்
வண்டமிழ்மாலைக்கி-ரங்கியருள்புரி (கதிர்வேன்)

---

இராகம்-பிலஹரி-தாளம்-அடைதாள்ச்சாப்பு.

பல்லவி.

முருகாவென்னையாளவா-மாமயிலேறி
முருகாவென்னையாளவா

அநுபல்லவி.

குருமுனிக்கருள்-பிரணவவடி
வேலனே-சீலனே-கோலனே-லோலனே
தருணஞ்சிவகிரி-தனிலிலங்கிய (முருகா)

சரணங்கள்.

இமையோர்கள்பணிபாதா-தமியேன்மீதி
லிரங்காமலிதம்வாதா
சமயபேதக-சமணழித்திடும்
நாதனே-நீதனே-போதனே-வேதனே
சமயமிதுவுன-தருள்புரிந்து (முருகா)

சாமியேழைவிரோதியா-என்சஞ்சலந்
தவிர்த்தாளாதென்னநீதியா
பூமலிப்பழனி-மாமலையிலுறை
பூரணா-காரணா-வாரணா-தாரணா
தாமதிப்பது-தகுமோகதிர்வேல் (முருகா)

வருத்துதேமாயாவிசாரந்-தனையகற்றி
வரமளிப்பதுன்பாரம்
செருக்களத்தினில்-ஜெயமுலாவிய
சேவலா-காவலா-பாவலா-நாவலா
வருத்தஞ்சகித்திட-வசமோகதிர்வேல் (முரு)

மௌனகுருருத்திர-மூர்த்திதாசன்
வந்தித்திடும்பாதனே
கனகசிவகிரி-தனிலிலகும்வேற்
கையனே-துய்யனே-மெய்யனே-ஐயனே
வனமயிலின்மிசை-வளர்சற்குருபர (முரு)

இராகம்-கமாசு-தாளம்-சாப்பு.

பல்லவி.

வாரணகேதன-கோமளதேகா
கோமளதேகா-தாமவிசாகா

அநுபல்லவி.

ஆரணரூபா-காரணநீபா
பூரணதீபா-வீரப்பதாபா (வாரண)

சரணங்கள்.

சொன்னதுகேளா-தென்னபொற்றாளா
பன்னிருதோளா-யென்னைநீயாளா (வாரண)

கொந்துளம்வாடி-யுந்தனைநாடி
செந்தமிழ்பாடி-வந்தனன்தேடி (வாரண)

ஞானவிநோதா-கானவல்நாதா
ஏனென்மேல்வாதா-வானருள்தாதா (வாரண)

குஞ்சரிபாகா-தஞ்சம்வையோகா
வஞ்சகமாகா-ரஞ்சிதயோகா (வாரண)

பானுநீபாரா-தேதுமயூரா
வேதனைதீரா-சூரசெனவீரா (வாரண)

கல்வியுண்டாக்கு-கலியைப்போக்கு
வல்வினைநீக்கு-வந்தருள்தேக்கு (வாரண)

மௌனகுரு-ருத்திரமூர்த்தி
நினமும்போற்றுஞ்-சிற்பராசீர்த்தி (வாரண)

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

வாவாபிரணவமயகுகனே-மாமரகதமயின்மிசை
வாவாபிரணவமயகுகனே.

அநுபல்லவி.

தேவாசுரர்கள்மூதற்-பாவாணர்களும்பணி
சேவடிதனைக்காட்ட-வாவலதாகயென்முன் (வாவா)

சரணங்கள்.

சன்மார்க்கநெறிநிலை-தனையரியாமலென்றுந்
தையலரிதமோக-சாகரத்துழன்று
வன்மனப்பேயுமென்-வசப்படாமற்சுழன்று
வருந்திப்பாதவித்து-வாடுமேழைமுன்னின்று (வாவா)
என்னசொல்லியுமன-திரக்கமிராதா
ஏழைமீதினுனக்-கின்னமும்வாதா
பொன்னுலகோர்நிதம்-போற்றும்பொற்பாதா
போதமில்லாதசிறு-புல்லன்முன்நாதா (வாவா)
தஞ்சமுன்றனையன்றித்-தானும்வேறேது
தாசன்மௌனகுரு-ருத்ரமூர்த்திமீது
வெஞ்சினம்வைப்பது-விமலாதகாது
மெல்லடிதந்துகாக்க-விரைவோடிப்போது (வாவா)

இராகம்-காம்போதி-தாளம்-அடைதாளச்சாப்பு.

கண்ணிகள்.

அண்டர்முனிவர்-தெண்டனிட்டேத்தும்
ஆனந்தப்பொருளே-ஞானத்தெருளே-யுகந்தருளே
குகனே-அத்தனே-யத்தனே-யத்தனே
யுன்றன்பதமே-நாநம்பினேன்
எண்டிசைக்குள்கண்-கண்டதெய்வம்நீ
யில்லாமல்வேறு-முண்டோகாருக்-ஈதிருக்
குகனே-எந்தையே-யெந்தையே-யெந்தையே
யுன்றன்பதமே-நாநம்பினேன்
தஞ்சமென்றுனை-யஞ்சலிசெயுந்
தாசன்மேல்வாதா-வெகுகுநா-குருநாதா
குகனே-சண்முகா-சண்முகா-சண்முகா
வுன்றன்பதமேநாநம்பினேன்
கஞ்சமென்மலர்ச்-செஞ்சரண்தந்து
கதியருள்சீலா-வனுகூலா-வுமைபாலா
குகனே-கர்த்தனே-கர்த்தனே-கர்த்தனே
யுன்றன்பதமே-நாநம்பினேன்
சித்தமிரங்கி-முத்திதந்தருள்
செந்தமிழ்த்யாகா-மகாயோகா-வள்ளிபாகா - குகனே-சிற்பரா-சிற்
பரா-சிற்பரா-வுன்றன்பதமேநாநம்பினேன்
பத்தன்மென்ன-குருருத்ரமூர்த்தி
பாமலர்வாகா-வஜ்ரதேகா-மாவைபோகா-குகனே-பரனே-பரனே
பரனே-யுன்றன்பதமேநாநம்பினேன்

௰௪-இராகம்-சங்கராபரணம்-தாளம் - அடைதாளச்சாப்பு

பல்லவி.

சின்னஞ்சிறியேன்மீதுவாதா
தேவாசிவசண்முகநாதா

அநுபல்லவி.

பொன்னுலகோர்-பன்னுமகா
சின்மயம்நீள்-மன்னவனே (சின்ன)

சரணங்கள்.

முத்திகொடுக்குந்தண்டபாணி
மூர்த்தியுன்திருவடிபேணி

நித்தியமுஞ்சித்தமகிழ்
பெத்திடவுன்-பத்திசெயுஞ் (சின்னஞ்)
தண்டமிழ்பலதுன்மேற்பாடி
சந்ததந்தொழுமென்மேல்மோடி
கொண்டதென்-விண்டருள்செய்
தொண்டனென-வண்டுகிற (சின்னஞ்)
மௌனகுருருத்ரமூர்த்தி
வாழ்த்துந்தமிழ்க்கருள்புரிசீர்த்தி
அனுதினமு-முனதுதிரு
வனசபத-மினிதொடுசொல் (சின்னஞ்)

௰உ-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு

பல்லவி.

தாதாதாவுன்-சாணம்புயசேவை-நீ
தாதாதாவுன்

அநுபல்லவி.

வேதாவிநோதாகருணை
வேன்முருகேசா-சுகந் (தாதாதா)

சரணங்கள்,

தஞ்சமென்றபேர்களைக்கை-தானும்விடலாமா
அஞ்சலுடன்வந்தெனைநீ-யாளாவிடிற்போமாஅருள் (தாதாதா)
செஞ்சரண்போற்றவரியாச்சிறுவனென்றாலும்
வஞ்சனைதவிர்த்தேனைமுன்வந்துநீமென்மேலுங்க்ருபை (தாதா
பெத்தசுதன்மேல்வெறுப்புபேதையருக்குண்டோ
அத்தனேயிவ்வண்ணமுமநீ-யறியாததுண்டோமேன்மை (தாதா)
வனமாலிகாபரணமாயவன்மருகா
மௌனகுருருத்ரமூர்த்திவழுத்தும்முருகா-கதி (தாதாதா)

௰௩-இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு

பல்லவி.

செந்திருவளர்பழனிமாமலைத்தேசிகாவடிவேற்கையா
வந்துதமியேன்மனப்படிக்குநல்
வரந்தந்தெந்தனையாள்மெய்யா

அநுபல்லவி.

அந்திபகலுங்கந்தாவுன்றிரு-வடிமலர்நம்பிடுமென்னை
சிந்தைநீமகிழ்ந்தருள்செயாவிடிற்-செகத்தினிற்றிக்குண்டோபின்னை
(செந்திரு)

சரணங்கள்.

விஞ்ஞைசமுனிவரஞ்சலிசெயும்-வேதமாயலர்ப்பாதனே
தஞ்சமெனுமிப்பஞ்சையைக்காக்கத்-தருணஞ்சண்முககாதனே (செந்)

ஆதிமூலமென்றழைத்தவேழமுன்-னரியும்வந்தாளில்லையா
மேதினியிலுன்பதமறவாவென்-விதிதீர்ந்தாளாதேன்சொல்லையா (செந்)

பக்தவச்சலனென்றுமேயுன்னைப்-பலகலைகளும்பன்னுதே
சித்தமுமாயாபாசம்வந்தென்னை-நேர்ந்துசஞ்சலந்துன்னுதே (செந்தி)

பத்தியாய்மௌனகுருருத்ரமூர்த்தி-பாடுந்தமிழ்க்குதாரனே
நித்தியானந்தபோதமெய்ஞ்ஞான-நிமலசாக்ஷாத்காரனே (செந்திரு)

———*———

ஆசிரியவிருத்தம்.

பாதநடமிடுகலபமயில்வயப்பரியில்வரு
பன்னிருபுயக்குமரவேள்
சாதமிகுகிண்கிணிசிலம்புதண்டைகளிலகு
சரணமலர்தொழவேணுமே
சூதவகைபயில்கின்றகலசதனமடவார்கள்
சுகவாரியெனும்மாய்கையின்
விரதமறுதவறுமல்லிலைநாட்டல்வேண்டுமோ
வினவுவாய்கொடியநெஞ்சே

௰௪-இராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

பல்லவி.

எதுவேணுஞ்சொல்நெஞ்சமே-யுனக்
கெதுவேணுஞ்சொல்நெஞ்சமே

அநுபல்லவி.

விதியரிபுரந்தரன்விண்ணவரும்போற்றும்வேலவன்பதம்வேணுமா-அல்
லால்-மதிமுகசுந்தரமாதர்கள்மையலால்மடிந்திடவேவேணுமா (உனக்)

சரணங்கள்.

திருப்பரங்குன்றனைப்பன்னிருகையனைத்தெரிசித்திடவேவேணுமா -இ
ப்ப-விருப்பமதாகவிளம்பெண்கள்பாற்சிக்கிமெலிந்திடவேவேணுமா (

சுந்தரமுனிவர்கள்வந்தித்துப்புகழ்குகர்தன்பதம்வேணுமா-முலைப்
பந்திற்பகட்டிமெள்ளச்சந்திக்குள்விடுகின்றபாவிகளேவேணுமா(உன)

அல்லும்பகலும்பத்தர்க்காதாரமாகியவாறுமுகவன்வேணுமா-கருங்
கல்லுமுருகவார்த்தைசொல்லிமதிமயக்குங்கன்னியரோவேணுமா(உனக்

கு

அற்பசுகத்தையகற்றிப்ரம்மானந்தமருள்பவன்றாள்வேணுமா-நாளும்
விற்பனவேசையராசாபாசத்தினில்விழுந்திடவேவேணுமா (உனக்கெ)
கோலாகலாபமயிலின்மீதில்வருகுமரன்சரண்வேணுமா-வடி
வேலானகூர்விழிமின்னாரிடஞ்சிக்கிவீணில்வருந்தவேணுமா (உனக்)
முத்திக்குவித்தாய்முளைத்திடுமோனமுருகன்பதம்வேணுமா-கொஞ்சுந்
தத்தையராசைக்கொப்பத்திலகப்பட்டுத்தாழ்ந்தழுந்தவேணுமா (உன)
தண்டைசிலம்புசதங்கைகுலுங்குதண்டாயுதன்றாள்வேணுமா-கெட்ட
சண்டிகளென்றமகாவஞ்சவன்மனத்தையலரேவேணுமா(உனக்கெது)
சந்ததமிந்த்ரதலந்தனைக்காத்திடுஞ்சாமிபதம்வேணுமா-பொல்லா
அந்தகனூர்சேர்க்கவந்துமருட்டியவரிவையரோவேணுமா (உனக்கெது)
மாயாப்ரபஞ்சத்தால்மங்கையர்தனைநத்திமாய்ந்திடவேவேணுமா-தினம்
நேயமதாய்மௌனகுருருத்ரமூர்த்திசொல்விமலன்பதம்வேணுமே(உன

———✽———

௰௫-இராகம்-மோஹனகல்யாணிதாளம்அடை-தாளச்சாப்பு

பல்லவி.

சரவணபவநாதன்-சரணத்தைநாடு
சந்ததமுந்துதிபாடு-மனமே

அநுபல்லவி.

பரிமளகுங்கும-பன்னிருதோளன்
பலகலைமென்மேலும்-பரவும்பொற்றாளன்
பணிபவர்க்கருளுங்குணாளன் (சரவண)

சரணங்கள்.

பாசபந்தமகற்றும்-பன்னிருகையன்
பரமசற்குருபரதுய்யன்
வாசவன்துயர்தீர்த்து-வளர்முருகையன்
வருந்தும்நமதிஷ்ட-வரந்தருமெய்யன்
மணிமரகதமயில்வையன் (சரவண)
ஞானவழியீதென-நவில்கின்றபோதன்
நாதாந்தசமரசவேதன்
மோனசடாக்ஷர-மூல-மூலமந்த்ரவினோதன்
முத்திக்கிவித்தாய்-முளைத்தெழும்நாதன்
முற்றும்நமைக்காக்கும்நீதன் (சரவண)

வண்டினஞ்சூழ்நீப-மணமலர்த்தாரன்
மறைதினம்புகழும் கெம்பீரன்
அண்டுமௌனகுரு-ருத்ரமூர்த்திக்காதாரன்
ஆவினன்குடிதனி-லமர்ந்திடும்வீரன்
அருந்தமிழ்முனிக்குபகாரன் (சரவண)

௰௬-இராகம்-சகானா-தாளம்-ஆதி

பல்லவி.

காத்தருளையா-கதிர்வடிவேற்கையா
காத்தருளையா

அநுபல்லவி.

பார்த்திபசிங்காரா
பன்னிருகரவீரா (காத்தருள்)

சரணங்கள்.

மாமயில்போக்கி-மலர்க்கண்ணினால்நோக்கி
நேமமுண்டாக்கி-நிகழுந்துயர்நீக்கி (காத்தருள்)
வாதென்றன்மீது-வழங்கிடலாகாது
சூதுனக்கேது-துறையேயீதிப்போது (காத்தருள்)
தஞ்சமாய்நானே-சந்ததம்நம்பினேனே
குஞ்சரிதானே-குலவுமுருகோனே (காத்தருள்)
குணமுடன்மௌன-குருருத்ரமூர்த்தி
மணமிகுந்தமிழ்மலர்புனைவபோகா (காத்தருள்)

௰எ-இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

தஞ்சமுன்றன்பாதமேகதி
சதுர்மறைமூலா-நற்
கதிதரும்வேலா

அநுபல்லவி.

வஞ்சவரக்க-ரஞ்சியோட முன்
வதைத்திட்டசீலா-தேவ
குஞ்சரிமண-மருவுமிங்கித

குருபரலோலா-பூங்
கோமளமேலா (தஞ்சமுன்)

சரணங்கள்.

நம்பினேனாக்கை-சோரவிடுதல்
ஞாயமோமெய்யா-சிவ
தம்பிரானுக்குக்-குடிலைப்பொருள்முன்
சாற்றியனுய்யா-நீ
தற்கார்முருகையர் (தஞ்சமுன்)

அண்டுமெந்தனக்-கின்பசுகந்தந்
தாளலாகாதா-நிதந்
தொண்டுபுரியு-மடிமையென்றுமே
தோனுதோவேதா-அத்
துவிதமெய்ப்போதா (தஞ்சமுன்)

மௌனகுருருத்ர-மூர்த்திசெந்தமிழ்
மலர்புனைவாகா-குற
வனிதைதழுவும்-மங்களாகர
வரதவிசாகா-நல்
வழியருள்த்யாகா (தஞ்சமுன்)

---

௰அ-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வன்மமென்னநாதா-வந்தனுக்ருபைதாதா
வன்மமென்னநாதா

அநுபல்லவி.

தன்மகுணதீபா-தாமமலர்நீபா (வன்ம)

சரணங்கள்.

எந்தன்கலிதீரும்-ஏழையைக்கண்பாரும்
பந்தபாசமாறும்-படிசெய்துகாரும் (வன்ம)
வல்வினையையோட்டு-மலர்ப்பதங்காட்டு
கல்விதனைநாட்டு-கருணைபாராட்டு (வன்ம)
மௌனகுருருத்ர-மூர்த்திதொழும்வேலா
சனகாதியர்துதி-சதுர்மறைமூலா (வன்ம)

௪கூ-இராகம்-தோடி-தாளம்-ஆதி

பல்லவி.

பரமகுருவாகிய-சரவணபவனை நீ
பணிந்திடுவாய்நெஞ்சமே

அநுபல்லவி.

இரவும்பகலுமன்ப-ரிதயந்தனில்மேவும்
ஈசனருளால்வந்து-வெழில்மயின்மீதுலாவும்
இங்கிதக்குக-னென்றுமெத்திசை
எங்கும்நற்புகழ்-தங்கும்வித்தக (பரம)

சரணங்கள்.

அருணகிரிநாதனுக்-கருள்செய்திடும்போதன்
அமரர்களனுதின-மஞ்சலிசெய்யும்பாதன்
சாதகுஞ்சரிவள்ளி-தழுவும்மங்களநாதன்
தஞ்சமென்றோர்க்கன்பு-சார்ந்தருளும்விநோதன்
சரச-கோபாலன்மகிழ்
அருமை-மருகன்றிகழ்
தாரணிக்கொரு-ஜீவரத்னம்
தாயுதித்திடும்-ஞானதற்பர (பரம)

விண்ணுடர்வெஞ்சிறை-விலக்கும்பன்னிருகையன்
வேதாந்தவீட்டினில்-விளங்கும்பிரணவதுய்யன்
கண்ணுயிரன்மனக்-கவலைமாற்றியமெய்யன்
கருணாகரசுப-காசிவமுருகையன்
கதிதரும்மறை-புகழ்லோலன்
விதிதனைச்சிறை-யிட்டவேலன்
கலியவுணர்கிளை-மெலியவமர்புரி
கனகபுஜபல-வனகன்மிகவொளிர் (பரம)

சரணகதியெனச்-சார்ந்தவர்கட்காதாரன்
ஷட்கோணமிசைவளர்-சர்வவ்யாபகதீரன்
வரமிலகும்பழனி-மாநகர்க்கதிகாரன்
மௌனகுருருத்ர-மூர்த்திதமிழ்க்குதாரன்
வாலைசுந்தரிமனோன்மணி
பாலகுமாரசிகாமணி
மண்டலம்புகழ்-அண்டர்கோங்களுங்
கண்டுமன்பொடு-தண்டமுஞ்செயும் (பரம)

உ௰-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-சாப்பு

பல்லவி.

எந்தன் மீதிற்க்ருபைவல்லையோ-வுனக்
கென்னசொல்லியும்-நெஞ்சிரக்கமில்லையோ

அநுபல்லவி.

செந்திருமேவியசோலைசூழ்-திகழ்
தென்பழனுபுரித்-தேசிகாவேணியாள் (எந்தன்)

சரணங்கள்.

மாதர்கள்மையலைப்போக்கு-உந்தன்
மலரடிதந்தும-கிழ்ச்சியுண்டாக்கு
பாதகருறவினை நீக்கு-மலர்ப்
பன்னிருகண்ணிலோர்-கடைக்கண்ணில்நோக்கு (எந்தன்)

வறுமைதவிர்க்கலாகாதா-உளம்
வாடிப்புலம்பிய-மதலைமேல்வராதா
தருமமோசிவகிரிநாதா-உனைத்
தஞ்சமெனநம்பினேன்-ததியருள்நாதா (எந்தன்)

எனக்குநல்வழிதனைக்காட்டு-நிதம்
ஏழைமீதிலுனக்-கென்னபோராட்டு
மனத்துயரைக்களைந்தோட்டு-உந்தன்
வன்மத்தைநீக்கியே-வந்தருள்காட்டு (எந்தன்)

மௌனகுருருத்ரமூர்த்தி-தமிழ்
மாலைக்குகந்தருள்-வடிவேலாசீர்த்தி
கனகமுனிவர்தொழும்பார்த்தி-பனே
கந்தாகுகாசண்மு-கானந்தமூர்த்தி (எந்தன்)

உ௧-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

முருகேசா-க்ருபை-யருள்நேசா

அநுபல்லவி.

குருபாராயா-குஞ்சரிநேயா (முருகே)

சரணங்கள்.

பத்தர்கள்சகாயா-பழமறைவாயா
சித்தனருள்சேயா-சீகார்த்திகேயா (முருகே)

கோலமயில்வீரா-கோசலைதண்பேரா
வேல்வகுமாரா-விற்பனவுதாரா (முருகே)

பத்தன்மௌனகுரு-ருத்ரமூர்த்திதுதி
மூத்தமிழ்க்கருள்செய்-கர்த்தவ்யமேததி (முருகே)

உஅ-இராகம்-சங்கராபரணம்-தாளம்-சாப்பு

பல்லவி.

தேவர்தொழுமுருகையா-சிவகிரிவடிவேற்கையா
தேவர்தொழுமுருகையா

அநுபல்லவி.

பாவலர்போற்றிடுஞ்-சேவலனேதிகழ்
தேவாதிதேவனே-கோவேயனுதினந் (தேவர்)

சரணங்கள்.

சத்துச்சித்தானந்தம்-பெத்தசாயூஜ்யத்தில்
உற்றபரப்ரம்ம-வஸ்துவைத்தேடிய (தேவர்)

வேதாமறைபுகழ்-நாதாவெணக்கருள்
தாதாகதிதரும்-போதாயென்னோமுந் (தேவர்)

மௌனகுருருத்ர-மூர்த்திபணிந்தேற்றும்
கனபழனியம்பதிக்-கந்தாவென்றனவரதந் (தேவர்)

உ௯-நோட்டு-இராகம்-பங்காளம்-தாளம்-ஆதி

பல்லவி.

எந்தைக்கேயருள்குகனேவர்
தெந்தன்கலிதீர்சமயமிதே

அநுபல்லவி.

தொந்தத்தோமெனநடமிடுசுந்தா
தோகைமயிலில்வரும்வடிவேலா
சுகுர்தத்தவதிடசுரர்கள்பணி
சோமமூகவசிகாசீலா

தொண்டன்பர்-கண்டின்பக்
கொண்டென்றுந்-தண்டஞ்செயவுயர் (எந்தை)

சரணங்கள்.

சச்சிதானந்தசிரோமயகுஞ்
சாமுகசோதரகுருபரனே
சதுர்மறைமுடிவினில்நடனமிகுந்
தண்டாயுதபன்னிருகரனே
தாரகரூபக்ருபாகரனே
வாரணகேதனமணிகரனே
தரணியர்கள்-சரதமொடு
பரவுதிட-வரதனெனவும்புகழ் (எந்தை)
அண்டசராசரமெண்டிசையு
மாவலுடன்படைத்தாள்முருகா
அந்தமிகுந்தவைகுந்தமவள
ரரிமாதவன்மனமகிழ்மருகா
அணியிந்திரன்விதிபணிபாதா
தணிகைப்பதிதனிலுறைவேதா
அழகியசங்-கரிதனையே
தழுவியசங்-கரனெனவேதிகழ் (எந்தை)
மகிழ்வொடுசந்ததம்
மௌனகுருருத்திரமூர்த்தி
மலர்தமிழ்சூடியசரவணப
வன்திகழ்பூவுலகுங்கீர்த்தி
வண்மைப்பழனிவரைமிசைவாழ்
கண்யங்காங்கயனேயெனையாளு
வண்டமிழ்க்கவி-வாணர்துதி
கொண்டவற்புத-தானுவதாய்வளர் (எந்தை)

———*———

உசு-இராகம்-கமாசு-தாளம்-ஆதி

பல்லவி.

காரணசரவணபவகுகனே-நற்
கதிதரவினுதவி-காரண

அநுபல்லவி.

ஆரணிசந்த்ரமு-காரவிந்தகுமரி-நீரீரீ
அமலக்ருபாகர-குமாரனெனவேவளர் (காரண)

சரணங்கள்.

சரதமுனிவர்பணிவனசமாமலரடி-நாதா-நீதாஞான
சண்முகஞ்ஞ தயாபரவேதவிநோதா
பரகதியுதவெனும்-படிதொழுமன்பர்கள்-நீரீரீ
பத்திமுத்திவை-ராக்கியம்பார்த்தருள் (காரண)
குங்குமகளபசவ்வாதுபூணலங்க்ருத-தோளா-வேளாமோன
குண்டலிதனில்நடமிடும்பதுமமலர்த்தாளா
பங்கயமலரடி-பரவுமருணகிரி-நீரீரீ
பாடக்கருணைதரும்-பழனியங்கிரிவளர் (காரண)
மணிமரகதமயின்மீதுநடனமிடும்-லோலா-கோலா-வேத
மந்த்ரசடாக்ஷரக்கந்தனென்றுரையதிமூலா
திணிகொள்காலாயுத-சேந்தாவுன்புகழ்நிதம்-நீரீரீ
செப்புமௌனகுரு-ருத்திரமூர்த்திக்கருள் (காரண)

———*———

உரு-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி

பல்லவி.

கந்தநாயகனே-வந்துதமியேனைக்
காத்துரக்ஷித்தருளே

அநுபல்லவி.

பந்தபாசமதனாற்-படிமிசையிலுழன்று
பாவியென்மனமது-பனைதக்கின்றதேசுழன்று (கந்த)

சரணங்கள்.

ஆணவமாய்கைகாம-வஞ்ஞானந்தனைப்போக்கி
அத்துவிதானந்த-வநுபவத்தையுண்டாக்கி
வீணவமாய்ப்போகாமல்-மெய்ஞ்ஞானவழிதேக்கி
மித்தையெனும்ப்ரபஞ்ச-மின்னல்வாழ்வினைநீக்கி (கந்த)
முன்னஞ்செய்வினையினாற்-பின்னால்ஜென்மமேதேதேன்
முழுதுமுன்னிருப்பதந்-தொழுகவருள்கொடுத்தே
வன்மனப்பாவியை-யென்வசமாயடுத்தே
வரும்படிசெய்வது-மலையெனவேவாவிடுத்தாய் (கந்த)

தினமுமௌனகுருருத்-திரமூர்த்திக்கனுகூலா
செங்கைதனிலிலங்கும்-ஜெயகதிர்வடிவேலா
சனகன்முதலோர்க்கருள்-சங்கரன்மகிழ்பாலா
தண்பழனுபுரிவாழ்-சாமிசண்முகசீலா (கந்த)

---

உசுா-இராகம்-அடாணா-தாளம்-ஆதி

பல்லவி.

வேலாவுன்றன்பதுமமலரடி-தினம்
மெய்யாகநம்பினேன்-துய்யாகதிர்வடி

அநுபல்லவி.

மேலோர்பணியும்-வியன்பழனுபுரி
மீதிலிலங்கும்-மெய்ஞ்ஞானசிவகிரி (வேலா)

சரணங்கள்.

ஆசையினாலேவருது பலவிதத்தொல்லை
அறிந்திடாவென்மனப்பேய்க்கதுதெரியுதில்லை
மாசைத்தடிந்தென்னையாண்டருள்செய்குவாய்தில்லை
மன்றுளாடியபானருள்பாலனேமுல்லை (வேலா)

பல்லாயிரங்கோடியண்டம்படைத்திட்டதூயா
பத்தர்கட்கென்றென்றுமன்புபுரியுஞ்சகாயா
எல்லாமுனைத்துணையன்றிவேறில்லையேசேயா
ஈடேற்றினாயேனையாண்டருளும்மறைநேயா (வேலா)

மண்டலம்போற்றுந்திருவாவினன்குடிவீரா
மௌனகுருருத்ரமூர்த்திதமிழ்மலர்த்தாரா
அண்டபகிரண்டமெண்டிசைகட்குமாதாரா
அற்புதப்பாதவிதநடனமாயூரா (வேலா)

---

உஎ-இராகம்-முகாரி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

மாயாவிகாரமாற்றி-வந்துதமியேன்
மனதைநல்வழிதேற்றி
ஓயாமலுனைப்போற்றிப்-பணியவருள்
ஓம்சரவணபவனே
வாக்கினிலேயடுத்து-யான்வேண்டியசென

பாக்கியம்நீகொடுத்து
நோக்கியென்குறைதடுத்து-ஆள்க்கொள்வதென்றே
நூபுரச்சண்முகனே
பாரமங்கையராசை-யனவரதம்
பற்றுமென்மனமாசைக்
காரறக்களைந்தோசை-கொடுப்பதென்றே
கதிர்வடிவேலவனே
நன்னிலைதனைக்காணு-தலையுஞ்சிறு
நாயேன்றன்மீதில்வீணாய்
வன்மம்வையாதேசேணு-டர்வந்துபணி
வளர்சிவகிரிக்குகனே
உந்தன்பஜனைசெய்ய-அடியேன்வேண்டும்
உதவியெல்லாம்நீசெய்ய
வந்தருள்ததிதுய்ய-சதுர்மறையும்
வாழ்த்துந்தண்டாயுதனே
மௌனகுருருத்திர-மூர்த்திதாசன்
வழுத்தும்பழனிக்ஷேத்ரா
கனமொளிர்சிவகோத்ரந்-தனில்விளங்குங்
கருணாகரத்தெய்வமே

---

உஅ-இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்

பல்லவி.

முருகாகருணையில்லையோ-மால்
மருகாகருணையில்லையோ

அநுபல்லவி.

திருவுலாவியசிவ-கிரிமிசைதனில்வளர்
குருபராதேவியருள்-வருபொருளேசமயம் (முருகா)

சரணங்கள்.

அன்பரைக்காக்கவல்லையோ-மூங்கா
ளவுணரைமாய்க்கவில்லையோ
வன்பனுன்பதங்கதி-யென்றுநம்பினேன்தகி
தென்பழனிபுரியி-லின்பமதாயுறைவேன் (முருகா)
இன்னமெனக்கென்னகஷ்டமோ-குகா
என்மேலுனக்கிலையிஷ்டமோ

உன்னையேசதமென்று-பொன்னடிதனைப்போற்றுஞ்
சின்னஞ்சிறியேன்-றன்னைநீகாப்பாற்ற (முரு)

சுத்தபரிமளதோளா-யெந்தன்
தொல்லைவிலக்கியாளா
பத்தன்மௌனகுரு-ருத்ரமூர்த்திக்கவிஞன்
சித்தப்படியுதவும்-வெற்றிப்புகழ்வடிவேல் (முரு)

———*———

உகூ-இராகம்-தன்யாசி-தாளம்-ஆ

பல்லவி.

சடாக்ஷரப்பொருளே-அடியேன்மேற்
கடாக்ஷம்வைத்தருளே

அநுபல்லவி.

சடாக்ஷரப்பொரு-ளாயுல்காவையுங்
கடாக்ஷித்தருள்தரும்-காங்கயாபழனிவாழ் (சடா)

சரணங்கள்.

சங்கரனருள்பாலா-மறைமுடி
தனில்நடமிடுசீலா
மங்கைசடாதரி-மகிழுஞ்சுதாகர
திங்கள்முகவசீர-திவ்யகுணாகர (சடாக்ஷ)

தேவர்முனிவர்சூழுங்-கதிரு
சிவகிரிமிசைவாழும்
மூவனேமுதல்வனே-மூத்தனேசித்யனே
காவலாநாயேனைக்-காத்துரக்ஷித்தருள் (சடாக்ஷ)

குமரசண்முகசேயா-திகழ்தெய்வ
குஞ்சரிமகிழ்நேயா
தமியேன்மௌனகுரு-ருத்திரமூர்த்தி
தாசனனுதினமும்-நேசமுடனுதிசெய் (சடா)

———*———

௩க-இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி

பல்லவி.

முருகாவுனைநம்பினேன்-கதிர்வடிவேல்
முருகாவுனைநம்பினேன்

அநுபல்லவி.

வரமிகுநக்கீரன்-மன்பதிவிலங்கிய
குருபரசண்முக-குகனேயென்றோரும் (முருகா)

சரணங்கள்.

காசினிதனிலென்னைக்காப்பவர்யாருமில்லை
பூசித்துனதுபதாம்-புயமலர்கதியென (முருகா)
அந்தாத்தமாரு-மகிலம்வாழனேவோருஞ்
சிந்தித்துத்துதிசெயுந்-தேசோமயானந்த (முருகா)
வரதாமௌனகுரு-ருத்திரமூர்த்திதாசன்
பரவிப்பணிந்தேத்தும்-பழனியத்கிரிவளர் (முருகா)

---*---

௩உ-இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி.

கடைக்கண்ணினாற்பாரையா-அடியேனைக்
காரர்விட்டாலாரையா

அநுபல்லவி.

அடைக்கலம்புகுவரை-யாதரித்திடும்நீதா
படைப்பணிசூராகாலா-பழனியம்பதிவேதா (கடை)

சரணங்கள்.

கூன்சுரபாண்டியன்-குறையகற்றியநாதா
நானுன்றஞ்சமலவோ-ரக்ஷித்திடலாகாதா (கடை)
சஞ்சலத்தால்மிதமுந்-தான்மெலிந்திடுவேனோ
பஞ்சைமேல்வாதுசெய்யப்-படிமிசையெதிர்நானோ (கடைக்க)
தண்டமிழோர்புகழுன்-சரணம்புயஞ்சிரமேற்
கொண்டுபணியும்மௌன-குருருத்ரமூர்த்தியை (கடைக்க)

---*---

௩௩-இராகம்-பந்துவராளி-தாளம்.

பல்லவி.

பாராமுகமேனையா-அடிமைமீது
பாராமுகமேனையா

அநுபல்லவி.

வீராவளர்பழனி-யூராள்கதம்பமலர்த்
தாராஞானசுகவிஸ்-தாராசண்முகதேவா

தறைபுகழமரர்க-ளேங்கிடும்படி
நிறையிடுமவுணர்கு-ழாங்கலங்கிட
சமர்செயுமபயர்கள்-சூழ்ந்திலங்கிட
அமர்முரசுகள்பல-வார்ந்தலம்பிட
தரிகிடஜெணுதப-தகணகதிரிகுகு
திரிகிடதிமிதக-திமிதரிகுகுவென
சங்கரசெம்புல-மஞ்சநடம்புரி
துங்கமிகுஞ்சிகி-யின்புறம்வந்தவி
சாகா-களபகந்த-வாகா-தெய்வகுஞ்சரி
பாகா-காத்தருள்செய்வை-போகா-சமயமிது (பாராமுகமேனையா)

சரணங்கள்,

காலாயுதமதுகை-வேலாவுமையருளும்
பாலாவிபுதர்பணி-லோலாசதுர்மறையின்
மூலாபலகலைவி-சாலாதருமகுண
சீலாவம்பலமய-கோலாகலமிகுமேலா
சிற்சபைதனிலொளிர்-தாண்டவம்புரி
தற்பரமயசிவ-சாம்பசங்கர
ஜெயவான்மகிழ்கொள-ஓர்பரம்பொருள்
ஓயிலுடனருளிய-சேந்தனென்குரு
சேயா-கருணைவளர்-தூயா-வமூர்தகனி
வாயா-தொழுமடியர்-நேயா-துதிசெயுமென்
தீவினைதனைவாட்டு-கலிபிணிகள்
யாவுமகலவோட்டு-கருணைவளர்
தேவா-அடிமைகொள்ள-வாவா-தநிமஹானு
பாவா-மகிழ்ச்சியுடன்-காவா-சமயமிது (பாராமுகமேனையா)

வேதாசுரர்பணிபொற்-பாதாவத்துவைதவி
நோதாதமியேன்மீது-வாதாகூறவனிதை
நாதாமனுமுறைதேர்-கீதாமணமுமிரங்
காதாவுனதுக்ருபை-தாதாசகப்ரக்யாதா
கதிதருசிவகிரி-மீதமர்ந்திடு
மதிப்திபுகழ்பெரும்-ஞானபண்டித
கயமுகசோதர-ஞனசெங்கதிர்
அயிலிறையாயசடாணனன்திசழ்
கமலவயன்சிறை-மேவிடும்படி

அமல்கள்புரிந்தத-யாளன்மந்தர
காரணஜெயபரி-பூரணஜாஹரி
நாரணன்மருமக-ஞானபரிபூரக்
காலா-மகிழ்ந்துமினி-மேலா-இலருள்செய்குஹளா
என்றென்றுமனு-கூலா-சமயமிது (பாராமுகமேனையா)

கந்தாசித்சுகமது-தந்தாதரிக்குமுமை
மைந்தாதொண்டர்கள்மன-ச்-செந்தாமரைக்குளொளிர்
சொந்தாநம்பியவெனை-வந்தாள்திருஞானசம்
பந்தாதெழுமமரர்-சிந்தகுலக்கீர்த்தவேற்குர்தா
பலகலையாகம்-சாஸ்திரந்தினம்
நலமொடுதாயக-தோத்திரஞ்செயும்
பரிமளகுங்கும-மார்ந்ததிண்புய
அரஹரநம்பர-காங்கயன்றினம்
பத்தன்மௌனகு-ருத்திரமூர்த்திபுகழ்
மூத்தமிழ்மாலைக்கருள்-சித்தன்பணிபவர்க்கு
ப்ரகதியுதவியபோதா-அனவரதந்
நாகம்யிலில்வரும்நீதா-சதுர்விதவு
பாயா-காத்தருளும்வி-தேயா-திவ்வியகார்த்தி
கேயா-கோமளவச்ர-காயா-சமயமிது (பாராமுகமேனையா)

௩௪-இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

தருணந்தருணமிது-கண்டருள்செய்யாதவிடிற்
றஞ்சமுனையலதில்லையே

அநுபல்லவி.

வருணமயிலின்மீது-வந்தெனையாண்டருள்தாதா
வள்ளிதிருக்குஞ்சரிமின்-மகிழும்பிராணநாதா
மங்களமிகும்பழனி-யங்கிரிவிளங்கவருள்
தங்கியசிலம்பனெனு-மிங்கிதகுகக்குமரா (தருண)

சரணங்கள்.

மாயாவிகற்பஜெக-வாழ்வினைச்சதமென்றெண்ணி
வருந்தியேமனமதுவாடி-உந்தன்
தூயபொற்பாதார-விந்தமனைத்தினையாமல்
துஷ்டர்களுடனையுறவாடி
தொல்புவிதனில்வருந்தும்
அல்லல்பலதேபொருந்தும்

சோர்ந்திருந்தவுன-மைந்தனைக் கண்கொள
வந்துபுரந்தருளினை தந்தீஞ்ஞானமூககுகா (தருணம்)

வறுமைதவிர்த்துச்சந்-தானசௌபாக்யமென்மேல்
வழங்காததென்னமுருகோனே-எந்தன்
அருமையைப்பெற்றெடுத்த-தாயேயுனையல்லாமல்
யாரறிவார்பெருமானே
அண்டர்கள்சேனாபதியே
தண்டமிழ்க்கருள்நிதியே
அந்திபகலும்வருந்தும்-பந்தவிருளைத்தடிந்து
வந்துகருணைபுரிந்து எந்தனைக்காத்திடவிது (தருணம்)

மதுரகவியென்ன-குருருத்ரமூர்த்திதாசன்
வாழ்த்திப்பணியுமுருகேசா
பதுமமாதிலகிய-சிவகிரிமிசைவளர்
பரமசிற்சுகசெகதீசா
பண்டைவினைகளைப்போக்கி
தொண்டன்முகந்தனைநோக்கி
பச்சைமயின்மேற்றுலங்க-சச்சிதானந்தவடிவாய்
பட்சமுடன்வந்துமெனை-ரக்ஷித்தருள்புரிந்திட (தருணம்)

௩௫-இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

சரவணபவனேயுன்-சரணம்புயமலரைத்
தந்தெனையாள்வது மெப்போ

அநுபல்லவி.

அரவாபரணப்புனையப்பலவாண
னாகமகிழ்ந்தருளியபாலா
குரவாநம்புமென் மனக்குறைதவிர்த்தாண்டருள்
கொடுப்பதென்றுகதிர்வேலா (சரவண)

சரணங்கள்.

சஞ்சலமெனும்பிரபஞ்சக்கடற்கடந்து
சாயூஜ்யமடைவதுமெப்போ
தஞ்சமெனுமெனையேயஞ்சலுளனேவந்து
தடுத்தாட்கொள்வதுநீயெப்போ (சரவண)

மண்ணாசைபொன்னாசைமாதர்களாசையின்
மயக்கினையறுப்பதுமெப்போ
கண்ணாயிரன்மனக்கலியகற்றியதேவா
கடைத்தேறுவதுநானெப்போ (சரவண)

சந்ததமுன்திருத்தாளினைப்பரவிய
தாசர்க்கடிமையாவதெப்போ
உந்தன்சடாக்ஷரமந்திரப்பொருளினை
யுகந்துநீயருள்வதுமெப்போ (சரவண)

மௌனகுருருத்ரமூர்த்திபணிந்தேற்றும்
மதுரதமிழ்க்கனுகூலா
வனசமலரிலுறைமங்கைவாழ்சிவகிரி
வளர்குருப்ரகுகலோலா (சரவண)

—*—

௩௬-இராகம்-பியாகடை-தாளம்-ஆதி

பல்லவி.

தண்டாயுதனேயுன்-சரணம்புயத்தைநம்புந்
தமியேனைக்காருமையா

அநுபல்லவி.

தண்டாமரைச்சோலைசூழ்-தாமசிவகிரிவாழ்
சந்தனக்கள-பம்புனைந்திடு
மந்தாதிண்புய-கந்தனென்குரு (தண்டா)

சரணங்கள்.

பண்டுவிதிப்பயனால்-படிமிசையுதித்தேன்நான்
பத்தியாயுனதிரு-பதம்பணியச்செய்யாதேன்
வண்டணிமலர்த்தாரா
வன்னமாயூரவீரா
மகிமைதக்கிய-செகதலங்களும்
மகிழ்வுடன்றுதி-புகலுமிங்கித (தண்டா)

இனியென்னஜென்மங்க-ளெடுத்துநான்பிறந்தாலும்
இன்புடனுனைத்துதித்-திடும்படியருள்கோலும்
கனகாம்புயதோளா
கதிகந்திடுகுணாளா

கற்பகத்தைநிதி-கர்த்தசிற்சுக
கர்த்தனத்துவி-தச்குமாரகுரு (தண்டா)
பத்தன்மௌனகுரு-ருத்ரமூர்த்திஸ்தோத்திரா
பாவலர்ப்பணிந்தேற்றும்-பழனியம்பதிக்ஷேத்ரா
முத்திக்கிமுதலோனே
மூாஹரிமருகோனே
மூலமந்திர-வேலனென்கு
மோனசம்ரம-ஞானபண்டித (தண்டா)

௩௭-இராகம்-மோஹனம்-தாளம்-சாப்பு

பல்லவி.

தெரிசனஞ்செய்நெஞ்சமே-சண்முகநாதன்
தெரிசனஞ்செய்நெஞ்சமே

அநுபல்லவி.

திருமருவும்பழனி-வரைமிசைதனில்வளர்
செங்கதிர்வடிவேலன்-பங்கயமலர்ப்பாத (தெரி)

சரணங்கள்.

சண்முகமாநதி-தன்னிற்புனலாடி
ஸ்தெளத்தியமாகவே-தண்டமிழ்ப்பலபாடி
வண்மைசேர்கிரிசுற்றி-மாயூரன்பதம்நாடி
மணியே-மணியே-கண்-மணியேயென்றுகொண்டாடி (தெரிச)

ஆதவன்றனைக்கண்டு-வம்புயமலர்ந்தாற்போல்
ஆநநமுமலர்ந்து-வகமுமிகமகிழ்ந்து
மோனசடாக்ஷர-மூலமந்த்ரமொழிந்து
முருகா-முருகா-மால்-மருகாவென்றேபுகழ்ந்து (தெரிச)

சோதிசொரூபமான-சுப்ரமண்யனைவாழ்த்தி
சொல்மௌனகுருத்ர-மூர்த்திபாவலரங்கேற்றி
பாதாரவிந்தத்தைப்-பணிந்துமலர்கள்சாற்றி
பரனே-பரனே-தற்-பரனேயென்றுபோற்றி (தெரிச)

௩௮-இராகம்-பைரவி-தாளம்-ஆதி

பல்லவி.

சண்முகநாதாவென்றன்
சஞ்சலந்தீர்த்தருள்செய்வாய்

அநுபல்லவி.

பண்மலர்புனைவாகா
பரமசுகவிசாகா (சண்முக)

சரணங்கள்.

குஞ்சரிவள்ளிபாகா-குருபரவைபோகா
அஞ்சலுடன்தியாகா-ஆதரித்திடும்யோகா (சண்)

ஆதரித்தெனைநீயே-யாண்டருள்புரிவாயே
மாதரிதருஞ்சேயே-மகிமைதங்கியநீயே (சண்)

நித்யம்மௌனகுரு-ருத்திரமூர்த்திதாசன்
சித்தந்தனிலொளிரும்-மூத்தையமுருகேச (சண்)

---

௩௯-ஸ்ரீராகம்-தாளம்-அடைதாளச்சாப்பு.

கண்ணிகள்.

ஏழைக்கிரங்குஞ்சண்முகனே-எனை
நடேற்றியாளுஞ்சிற்சுகனே-சற்குகனே
சரவணபவவடிவேலா-கதி
தந்தாள்வதென்றனுகூலா-மறைமூலா
பரிமளகுங்குமதோளா-வள்ளி
பாவுமங்களமணவாளா-யெனையாளா
சிவகிரிவளர்முருகையா-உந்தன்
செம்பொற்பாதம்நம்பினேன்மெய்யா-குமரையா
தினமுஞ்சஞ்சலம்பொறுப்பேனோ-நீயுஞ்
செய்யுஞ்சோதனைக்கெதிர்நானோ-முறைதானோ
சித்தமுனக்கிரக்கம்வலையா-முன்செய்
தீவினைமாற்றுதலோர்மலையா-அன்பிலையா
மனத்துயரைக்களைந்தோட்டு-ஞான
வழியுள்ளங்கைக்கனிபோற்காட்டு-க்ருபைநாட்டு
மெத்தத்தியங்குகின்றேனே-தொண்டு

வேலைக்கென்னையாட்கொள்ளத்தானே-முருகோனே
நினைத்தபோதெல்லாமென்முன்வந்து-மன
நேர்மைப்படியருள்புரிந்து-ஆறுகந்து
பாகதியுதவுமெய்ப்பொருளே-பாச
பந்தமகற்றிநற்றெருளே-வந்தருளே
குறுமுனிக்கருள்செய்தகுருவே-நாயேன்
குறைதவிர்த்தருள்புரிதிருவே-மறையுருவே
காட்சிகொடுப்பதெந்தநாளோ-தெய்வக்
கடைப்பிடியென்பதும்வீணோ-மறைப்பாளோ
மௌனகுருருத்ரமூர்த்தி-தமிழ்
மாலைக்கிரங்கியருள்சேர்த்தி-குகாபோற்றி

———*———

௬௰-இராகம்-பிலஹரி-தாளம்-ஆதி

பல்லவி.

நாதாயெனக்குவரந்-தாதாசம்யஞ்சதுர்
வேதாசுரர்தொழுமுன்-பாதாம்புயம்நம்பினேன்

அநுபல்லவி.

நீதாயான்செய்தபிழை-யாதானுலும்பொறுத்துன்
பாதாரவிந்தந்திப்-போதாகிலெனைக்காத்து (நாதா)

சரணங்கள்.

பாழானமதன்வலை-வீழாமலுன்தோத்திர்
பேழாகிலுங்கொடுத்துத்-தாழாதகலிமாற்றி (நாதா)
நம்பினேனையுனது-செம்பொனடிமலரா
எம்பிரானேதமியேன்-துன்பமெலாமகற்றி (நாதா)
நித்தியமுமுனையே-நத்திமகிழ்வினொடு
துத்தியஞ்செயுமென்மேற்-சித்தமிரங்கிஜெக (நாதா)
கோலசெந்தமிழ்மௌன-குருருத்ரமூர்த்திதாசன்
சீலமுடன்றுதிசெய்-சின்மயமுருகேச (நாதா)

௬க-தோடி-இராகம்-பங்காளம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சிந்தித்தேன்கந்தப்பாவென்
சிந்தைக்கலிதீர்க்கநீயே

அநுபல்லவி.

சந்தப்பாவலர்புகழுஞ்சிவகிரி
தனில்வளர்குருபரவடிவேலா
சந்ததமிக்கிதவமரர்பணி
சங்கரசம்புவினருள்பாலா
தஞ்சமெண-வஞ்சலொடு
கஞ்சமலர்ச்-செஞ்சரணந்தனே (சிந்தி)

சரணங்கள்.

மந்தரப்ரணவசொரூபசிரா
மயஜெகம்மோனகுருபரனே
வரசிப்பரிமீதேநடனம்
மருவும்ஜீவதயாபரனே
சந்த்ரசடாதரதுங்கநீள்மா
தங்கவதனனதுசோதரனே
சதுர்மாமறையும் புகழ்கனக
தண்டாயுதபன்னிருகரனே
சரதகுறமுனிபணிபாதா
வரதசிகாமணியெனும்நாதா
சந்ததமும்-வந்தனேயா
டுந்தனர-விந்தபதந்தனே (சிந்தி)

மணிமரகதமயில்மீதில்வரும்
மதிமுகசுந்த்ரவசீகரனே
வள்ளிக்குறமின்றனேமருவும்
மாதிடகுங்குமபுயவரனே
தணிகாசலமதில்மேவுகன
சண்முகநாதமனேகரனே
சாமளரூபபவானிபாரா
சத்தியருளியசுதாகரனே
தாமவனசமலர்ப்பாதா
பூமனேயேசிறையிடும்நீதா
சத்தியமா-நித்தியமும்
எத்தனேயோ-பத்தியுடனேநான் (சிந்தி)
விந்துசுழிமுனேதனிலுலவும்

மேன்மைச்சரவணபவகுகனே
வேதமெய்ஞ்ஞானபஞ்சாக்ஷரமாய்
விளக்குமத்விததாயகனே
செந்திருவளர்பழனிபுரிவாழ்
செந்தமிழ்முத்தையாசாரி
செல்வனெனும்வேலாசாரி
சேஷ்டபுத்திரனுகவளர்
சீர்த்திமௌனகுருருத்திர
மூர்த்திக்கவிவாணன்றின்மும்
செந்தமிழா-லுந்தனையே
யந்திபகலுந்துணையெனநான் (சிந்தித்)

---

௪௧-இராகம்-காப்பி-தாளம்-அடைதாளச்சாப்பு.

பல்லவி.

கந்தநாதாவுந்தனடி-தந்துமெனைக்காரையா

அநுபல்லவி.

சந்தனப்புனைதோளா-வந்துமெந்தனையாளா
இந்திரன்பணிதாளா (கந்தநா)

சரணங்கள்.

வேசையர்மையல்போக்கி-மாசுளபிணிநீக்கி
தாசனெனன்முகம்நோக்கி (கந்தநாதா)
அண்டர்கள்பணிபாதா-மண்டலம்புகழ்நீதா
தொண்டன்மேல்சிதம்வாதா (கந்தநாதா)
பத்தன்மௌனகுரு-ருத்திரமூர்த்திதொழுஞ்
சுத்தசைதன்யலோலா (கந்தநாதா)

---

௪௨-இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

முத்தையகுருதேசிகா-வுந்தன்
சித்தமிரக்கம்வல்லையோ

அநுபல்லவி.

கர்த்தவ்யசிஜாதிவடிவே-இகழ்
மத்வைதமறைமுடிவே (முத்தைய)

சரணங்கள்.

ஆலைவாய்க்கருப்பதுபோல்-நித
மகமெலிகின்றேன் துயரால்
பாலன் மீதென்னவாது-செய்யப்
படுமோதகாதிப்போது (முத்தைய)

சிந்தையும்நொந்துவாடுதே-பாச
பந்தவிருளுள்மூடுதே
தொந்தநோய்களுடாடுதே-பல
தொல்லைவந்தெனைநாடுதே (முத்தைய)

சோதிப்பதுதகாது-யெனைச்
சோரவிடலாகாது
பாதுபாராததேது-க்ருபை
பாலித்தருளிப்போது (முத்தைய)

இன்னமுங்கன்னெஞ்சமோ-தய
வில்லாததென்னவஞ்சமோ
உன்னருள்தரப்பஞ்சமோ-வந்து
உற்றதுயர்கள்கொஞ்சமோ (முத்தைய)

கல்வியமுதினையூட்டு-வருங்
கலிபிணிகளையோட்டு
செல்வமேன்மேல்நிலைநாட்டு-சின்னஞ்
சிறியேன்மீதென்னவாட்டு (முத்தைய)

ஆசாபாசத்தைப்போக்கு-உன
த்தடியிணைக்கேயாளாக்கு
மோசமாயையுமைநீக்கு-எனை
முற்றுங்காக்கக்கண்ணோக்கு (முத்தைய)

பத்தனெனும்மௌன-குரு
ருத்திரமூர்த்திதொழும்
முத்தமிழ்மாலைக்கருள்செய்-பரா
சத்திவடிவேற்கையா (முத்தைய)

——*——

௬௫-இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

பொல்லாநெஞ்சே-வந்தவல்வினையெல்லாம்
போம்பறந்துபின்றே.

அநுபல்லவி.

தில்லைநடேசனருள் வல்லபமதாய்வரு
முல்லைமுருகன்புகழ்-சொல்லிப்பணிந்துமகிழ் (பொல்)

சரணங்கள்.

ஆரியனாதி-யான்முதலவர்நாதி
குருவெனவளர்சோதி
விரிபுகழ்த்தென்னர்கோன்
மருவுகன்மச்சரங்கூன்
விலக்கிச்சமண்டணிந்த
துலக்கமுள்ளோனைப்பணி (பொல்லா)

காமக்குரோதலோப-கன்மங்கள்தனைநீக்கி
தாமதத்துவதீப
நேமமதாய்முருகன்
நாமத்தைமறவாமல்
நிதமும்பஜனைசெய்து
பதமலர்தனைத்தொழில் (பொல்லா)

பத்தன்மௌனகுரு-ருத்திரமூர்த்திமைந்
துத்தியக்குமாரகுரு
கர்த்தன்பதமலனர்
நித்தமுந்துதிப்போர்க்குக்
காலனணுகான்மேன்
மேலுஞ்சொன்னேன்சத்யம் (பொல்லா)

சகூ-இராகம்-முகாரி-தாளம்-ஆதி,

பல்லவி.

நாதனையேதுதிசெய்-வன்மனமே
நாதனையேதுதிசெய்

அநுபல்லவி.

மேதினியோர்களுக்-காதலுடன்றெழும்
நீதனெனுந்துய்ய-மாதவமுருகைய (நாத)

சரணங்கள்.

சதுர்மறைலோலனைக்-கதிர்வடிவேலனை
மதிமுகசீலனைக்-கதிதரும்மூலனை (நாத)
சிடுசிடுத்திட-வுணர்-படைகள்சிதறவோயில்
நடனமிடுகலப-திட-மரகதமயில் (நாத)
நித்யம்மௌனகுரு-ருத்திரமூர்த்திசொல்
கர்த்தன் திருப்பழனி-யத்தனெங்குந்திகழ் (நாத)

---

௪௫-இராகம்-தேசிகதோடி-தாளம்-சாப்பு.

பல்லவி.

கந்தநாயகா-எனைக்-காக்குந்தாயகா
வந்தருள்குகா-ஞான-வாரசண்முகா

அநுபல்லவி.

மந்தரதோளா-குற-வள்ளிபங்காளா
செந்திருத்தாளா-க்ருபை-செய்யுங்குணாளா (கந்த)

சரணங்கள்,

சதுர்மறைமூலா-சிவ-சம்புவின்பாலா
மதுரிதசீலா-திகழ்-மாவடிவேலா (கந்த)
வன்னமாயூரா-நீப-மாமலர்த்தாரா
சின்மயவீரா-புகழ்-திகழும்விஸ்தாரா (கந்த)
பத்தன்மௌன-குரு-ருத்திரமூர்த்தி
முத்தமிழ்க்கருள்-புரி-கர்த்தனேசீர்த்தி (கந்த)

---

௪௬-இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி,

கந்தாநீகதியே-வுனையன்றி
காப்பவர்வேறில்லையே

அநுபல்லவி.

சந்தனகுங்குமகந்தகளபம்புனைசாசவள்ளிமணாளா-நிதம்
பந்தனமாகவேயெந்தனைக்கடைக்கண்பார்த்தருள்செய்தாளா (க)

சரணங்கள்.

ஆஞ்சினபேர்களைக்கெஞ்சவடிப்பதுவாணத்தின்பொருளோ-குற
வஞ்சியைக்கூட்டிடத்தஞ்சமென்றேகினைமையல்கொண்டமருளோ (க)

ஆதாரமுன்னிருப்பாதாரவிந்ததனைதயன்றியுண்டோகுகனே-சிவ
மேதாரமீதுறைகேதாரவாகனவித்தகச்சண்முகனே (கந்தா)

அண்டபகிரண்டமெண்டிசைக்குள்ளும்நின்றுநிந்தயாபரனே-திவ்ய
தண்டமிழாற்போற்றுந்தொண்டனைக்காத்தருள்சத்வகுணாகரனே (கந்

மாயாவிசாரங்களோயாமல்வந்தென்னைவாட்டுகிறதேமெய்யா-கார்த்தி
கேயாகுகாவென்றுசேயானான்றுதித்திடக்கிருபைதந்தாளுமையா (க)

மௌனகுருருத்ரமூர்த்திதாசன்தமிழ்மாலிகைக்கனுகூலா-பூழ்
அனவாதமுமுழங்குஞ்சிவகிரியமர்ந்தவடிவேலா (கந்தா)

---

சஎ-திபதை-இராகம்-தர்ப்பார்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தந்தைதாய்பந்துஜனர்-சற்குருநீ-தானென்றுநம்புமெனை
எந்தவிதமுங்காப்பாய்-பழனிவா-ழேகாக்ஷரப்பொருளே
கந்தாசிவசண்முகா-கதிதருங் காங்கயநாதகுகா
வந்தாதரித்தருள்செய்-சிவகிரி-வாழுந்தண்டாயுதனே

சண்டாளனென்றுமெனைப்-பராக்காய்நீ-தள்ளாதேயுன் செங்கைவேலும்
சண்டாம்பழவினையு-மணுகுமோ-காருண்யசேவகனே.

உண்டுறங்குவதல்லால்-மற்றசெய-லொன்றறியேனெனையாள்-வண்டுற
ங்குஞ்சோலை-திகழ்சிவமாமலைவேலோனே.

பத்தியொன்றுமறியாத்-துஷ்டனுன-பாவியானாலுமென்மேற்-சித்தமி
ரங்கியருள்-சிவாசலத்-தேசிகச்சண்முகனே.

சித்திரமாதர்மையல்-லகற்றிநின்-செம்பொற்பதந்தருவாய்-மூத்திதனக்கு
வித்தாய்-மூவர்க்கிசேர்ழும்-மோனகுருபரனே.

மாதாகருவதனிற்-புகுதிலா-வண்ணம்நீகாத்ததுபோல் - மேதினியிலிப்
போதும்-வந்தென்னையாள்-வேதாகசியனே.

ஆதாரமுன்சரணந்-தனையன்றி - யாதேனுமிக்குளதோ -தாதாவந்துநிரு
பட-சிவானந்த-தன்னருள்பாலகனே

அனவாதமுமுனையே-பாடிப்புகழ-முடிமையதானவென்னை-மனமகிழ்ந்தே
காப்பாய்-வள்ளிபுணர்மங்களநாயகனே.

மௌனகுருருத்ர-மூர்த்திதாசன்- வாழ்த்துந்தமிழ்க்கருள்செய்சனகன்
முதலோர் துதிசிவகிரிதன்னில்வாழுமுருகனே.

---

முற்றிற்று

---

கட்டளைக்கலிப்பா.

சந்தனம்புனுகார்ந்தபயோதரச்
தாமசந்திரவிம்பமுகந்திகழ்
செந்தினைக்குறவள்ளிமணாளனே
சிவமலையமர்ந்தோங்குங்குருபரா
எந்தனைக்கடையம்பகம்நோக்குவாய்
யெந்தையேவானுலகினர்யாவரும்
வந்தனஞ்செயுந்தென்பழனுபுரி
வாழும்ஞானதண்டாயுதபாணியே. (க)

துய்யஞானக்கடல்படிந்தேயொளிர்
சோதியேபரமானந்தநாதனே
மெய்யனுகவளரும்வைகாபுரி
மீதிலங்கும்வரோதயமோனசுப்
பையனேயடியேன்றனைக்காத்தருள்
பரிமளங்களணியும்புயாசலா
வையம்போற்றியதென்பழனுபுரி
வாழும்ஞானதண்டாயுதபாணியே. (உ)

கலகமேவினைதானவர்நாட்டைமுன்
காலனூர்பதிசேரக்ரவுஞ்சமா
மலைதனைத்துளைத்தேதொழுமன்பர்கள்
மனமகிழ்ந்திடப்பெருகுஞ்செந்தேனே
நலமுலாவுஞ்சிகாவளமீதினில்
நடனமாடிடுஞ்சின்மயதேவனே
மலர்வனந்திகழ்தென்பழனுபுரி
வாழும்ஞானதண்டாயுதபாணியே (ங)

பானலமொழிமங்கையர்கண்ணம்பு
பட்டுமென்றன்மனக்கபியென்றுமே

கானல்மீதிலுலாவியமானெனக்
   கலங்குகின்றதற்கென்னசெய்குவேன்
தானருள்புரிந்தாளவிதுநல்ல
   சமயஞ்சாஸ்வதசம்பிரதாயனே
வானலோகைநேர்ந்தென்பழனுபுரி
   வாழுஞானதெண்டாயுதபாணிவே (௪)

பாவியாயவெனைச்சஞ்சலமெனும்
   பந்தபாசப்பிரபஞ்சவாழ்வினில்
மேவிடாமலுனதுபதாம்புய
   வீறுசேவைதந்தாண்டருள்செய்குவாய்
தேவியம்பிகைசின்மயபூரணி
   செல்வவாலைமனோன்மணிபாலனே
வாவிசூழ்ந்தொளிர் தென்பழனுபுரி
   வாழும்ஞானதெண்டாயுதபாணியே (௫)

துங்கவேதச்சிலம்பொலிபொற்பாதா
   துரியந்தன்னில்மூலைங்கெழுசோதியே
எங்கெனும்மெள்ளிலெண்ணையுமாமென
   விடைவிடாதொளிர்கின்றநிரந்தர
சங்குசக்கரகோதண்டபாணிசீ
   தாமுகுந்தன்மகிழுமருகனே
மங்களம்புனைதென்பழனுபுரி
   வாழும்ஞானதண்டாயுதபாணியே (௬)

கயிலையம்பதிவேதன்றனக்குமுன்
   கடிகில்வேதப்பொருளிதுவென்றுமே
பயின்றுநீடும்புகழ்படைத்தோங்கிய
   பரமசற்குருவேதிருநீள்சிவ
சயிலகாரணனுனகுகாஜெக
   சர்வஜீவதயாபரமூர்த்தியே
மயில்களாடிய தென்பழனுபுரி
   வாழும்ஞானதண்டாயுதபாணியே (௭)

பரசுபாணியனவரதமுறை
   பாண்டியவளநாட்டினிலோங்கிய
வரசன்கன்மச்சுரங்கூனகற்றியே
   யாற்றினிற்கரையேட்டினையேற்றியே

விரதசைனத்திரள்சமூமட்டியே
    விளக்கமாகவேசைவசமயத்தின்
மரபுகாத்தொளிர்தென்பழனிபுரி
    வாழும்ஞானதண்டாயுதபாணியே (௮)

நறையொழுகுங்கதம்பமணமலர்
    நற்றுடாணியுந்திண்புயாசலா
பிறைமுகந்திகழ்திவ்யலிங்கரப்
பிரபுவான பாராபரமூர்த்தியே
குறையைமாற்றி நினதருள் தந்துமே
குழவிநானுய்யும் வண்ணம்வந்தானுவாய்
மறைகள்போற்றிய தென்பழனிபுரி
வாழும்ஞானதண் டாயுதபாணியே (௯)

வேதம்நான்குந் துதித்திடுசிற்பர
வெளியில்மேவு மகோசாவஸ்துவே
நாதபோத பரிபூரணானந்த
நாயகாமுற்றும் நம்புமிவ்வேழைக்குன்
பாதபங்கய சேவையுதவிநீ
பாசபந்த பவமறுத்தானுவாய்
மாதவம்படை தென்பழனிபுரி
வாழும்ஞானதண் டாயுதபாணியே (௰)

முற்றிற்று.

———*———

கட்டளைக்கலித்துறை.

வேதாகமகலைபோற்றுஞ் சதானந்தவித்தெனுமுன்
பாதாரவிந்தஞ்சதமென நம்பியபாலகன்மேல்
வாதாமனமிரங்காதா மயூரத்தில்வந்துகதி
தாதாசமயந்திருப் பழனிபுரிச்சண்முகனே. (௧)

காலாயுதாவென்றன் றீவினையாவுமுன் கையிருக்கும்
வேலாயுதங்கண்டபோது முன்னிற்குமோவீரியருள்
பாலாவடைக்கலங்காத் தடியேன்முகம்பார்தயைவி
சாலாபரமதிருப் பழனிபுரிச்சண்முகனே. (௨)

வாராமிடிசனுஞ்வந்தேமருட்டியிவ்வையகத்திற்
    ராமேசனின்புகழ்க்கழ்கோதொழூர் புல்லர்க்கன்

டாராவிழுந்துஞ்சமுன்னையல்லாதில்லைபங்கடப்பக்
தாராநிற்குந்திருப்பழனுபுரிச்சண்முகனே. (௩)

பூமிக்கிப்பாரம்படைத்தனையன்றிப்புகலுளதோ
காமக்களஞ்சியமாதர்க்குப்பொய்யர்க்கசடரிவர்
நேமிக்கும்வேலைகட்காளாவனேபநம்பீயருள்வாய்
சாமிகருமைத்திருப்பழனுபுரிச்சண்முகனே. (௪)

ஏழைப்பெண்ணைபாவத்துக்காளாகவோவெனையிவ்வுலகிற்
சின்னப்படும்படிக்கேன்படைத்தாயுன்செயலிருந்தால்
முன்னஞ்செய்தீவினைவந்தென்னைச்சூழமுடிந்திடுமோ
சன்னதமோதருந்திருப்பழனுபுரிச்சண்முகனே. (௫)

கானத்தகன்றிட்டமானின்போற்றியங்குமென்கண்மனி
யீனத்தைப்போக்கியும்வினைகருமைதேக்கியீடேற்றியுமெய்ஞ்
ஞானத்தைநல்கிப்பொழும்பாதாடியந்தநற்றருணந்
தானத்தனுமானதிருப்பழனுபுரிச்சண்முகனே. (௬)

அனியாயமாகவேவாணாள்கழித்திந்தவப்புவியிற்
கனியாமலாசாபிசாசதிலார்ந்தவென்கன்மனதை
யினியாகிலும்பதம்போற்றும்படிசெய்திவ்வேழையைக்கார்
தனிமுதலானதிருப்பழனுபுரிச்சண்முகனே. (௭)

முருகாகுறுமுனிவன்குருவேஞானமுழுமுதலே
வருவாய்கதிர்வடிவேல்மயில்மீதயலர்துலங்கத்
திருவார்ப்பதாம்புயச்சேவைதந்திந்தச்சிறுவனைக்கா
தருவாயத்தனைமுத்ததிருப்பழனுபுரிச்சண்முகனே. (௮)

பவந்தருமஞ்ஞானபாசத்தைநீக்கியுன்பாதநித்ய
கவனத்தையென்மேற்பயின்றேனமனக்குரங்கைத்திருத்தி
சிவஞானபோதத்தைநல்கிநின்னன்பனுய்ச்சேர்த்திடுவாய்
தவமேதருநற்றிருப்பழனுபுரிச்சண்முகனே. (௯)

மந்தாரைமுல்லைமணமிகுநீபமென்மாலையணி
கந்தாகுகாகடம்பாகார்த்திகேயாகனிவுடனென்
சிந்தாகுலந்தவிர்த்தாண்டருள்ஞானசிகாமணியே
சந்தாசலமேன்திருப்பழனுபுரிச்சண்முகனே. (௰)

முற்றிற்று.

## விருத்தம்.

முத்திக்கிவித்தாய் மூலவித்தையெய்ஞ்ஞான முதல்வனேசதுர்மறைப்பொருளே, சத்திகருணாவிழிக்கா தன்பரைக்காத்துக் கதியருள்பரமேனாயகனே, புத்திகருணாவின்னாரின்றருள்வெள்ளத் தழுந்துங் குருகருணையங்கடலே, சத்திக்குயகவாய்ப் பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (க)

போற்றுவதென்றன் கடமையென்மனதிற் பொருந்தியவுலகிலாத துயரை, மாற்றுவதுன்றன் கடமைசன்மார்க்க வழிதனையறுபாவலனைக்காப், பாற்றுவதுமுன் கடமைசிறகுருபர பன்னிருபுயனாவாகா, சாற்றுதற்கரிய பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (உ)

அனந்தகோடிமுன் றிருவடிபோற்று மடிமையதானவென்றனக்குக், கனந்தருந்துயரையும் பாவமெலாந்தந்து கதிதந்துபுரந்தருள்சமயம், வனந்தனில்வேங்கை மரமெனக்குறமின் வள்ளிமுன்றோன்றியவாதா, தனந்தருந்திருநீள் பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (ங)

மூண்டகாசனனைச் சிறைதனில்மாட்டி மூவுலகினைப்புரந்தாண்டுங், கண்டகச்சூரர் சூழ்நனைக்கடிந்து கற்பகநாட்டினைக்காக்கும், அண்டர்காவலனுக் கணிமுடிதரித்தே யமரர்விஞ்சையர்பணிந்தேதற, தண்டமிழ்முழங்கும் பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (ச)

தொந்தமதானநோய்களொவற்றையுந்துலைத்து மென்மேற்கருணைகூர்ந்து, பந்தத்தினிருளைமாற்றி நற்றெருளைப்பாலித்துப் புரந்தருள்சாமியன், கந்தமென்மலர்சூழ் குழற்குறமாதைக் கலந்துகொள்சிவகுருநாதனே, சந்தமேவிறைந்த பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. ()

வண்டமரக்கேடி யருந்தமிழ்பாட வருமையாற்புகழ்ந்துகொண்டாடி, தொண்டரைப்போலப் பதத்தைச்சென்னிச் சூழுடன்பொருட்கிளைக்கவரும், பண்டரைப்போல வலைந்திடாதெனை நீ பாலித்துன்பதாம்லர்தருவாய், தண்டனைபோற்றும் பழனியம்பதிவாழ் சண்முகானந்த தேசிகனே. (௬)

வஞ்சகஞ்சூதுபிகும் பிரபஞ்சவாழ்வினைச் சதமென்றெண்ணி, செஞ்சரண்போற்றும் விதிமுறையுணராச் சிறுவனென்பிழைபொறுத்தா

ளவாய், குஞ்சரமுகத்தன் றனதுசோதரனே கோடிலாவமரர்கள்விந்ய ந், தஞ்சமென்றேத்தும பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே

கும்பமாமலைபோற் கொங்கைகளிலைகுங் கோதையர்மையலுறுமி ந்த, வம்பனைக்காப்ப தருளைமயோவன்று வனாதனைத்துளைத்தவேற்கை யா, எம்பரன்றனக்குக் குடிலைநற்பொருளி னியல்பினையுரைத்தவாபூங் க, தமபவனஞ்சூழ் பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (அ)

மாதனேமோங்குங் கௌரிக்கிச்சிவன்முன் வாக்கினுலளித்திடுஞ் சாப, வேதனைநீங்கவாரியிற்சேலாய் விளைந்துமுற்காலையிலெழுந்த,போ தரன்கூவத் தெரிசனந்தந்து பூசலம்போற்றுமெய்ப்பொருளே, சாதன மான பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (கூ)

துஷ்டனென்றிந்த வுலகினிலெவருஞ்சொல்விடாவண்ணமேயெ ன்றன், மட்டடங்காத சினத்தினைமாற்றி வந்துனதடிமலர்தந்து, திட்ட மாயடியேன் றனைப்புரந்தருள்வாய் செங்கண்மால்மகிழ்மருகோனே, ச ஷ்டியும்சவம்சீர் பழனியம்பதிவாழ் சண்முகானந்ததேசிகனே. (ய)

முற்றிற்று.

---*---

## அடைக்கலப்பத்து

### விருத்தம்.

தென்பேமிகுத்த சூரர்கிளைசிதறச் செங்கையில்வேற்றொடுத்து, மூன்பேவிபுதர்கோன் றனக்குமுடிசூட்டியமுதற்பொருளே, இன்பே புரியுஞ்சுகக்கடலே யெளியேன்மனதிருளகற்று, மன்பேசிவகிரியா ண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (க)

பொய்யாம்வாழ்வைச் சதமெனவே புவிமேல்யானும்மதிமயங்கி, மையார்ந்தகூர்விழிமாதர்தங்கள் வலையிலுழன்றுவருந்திதிதஞ், செய்யா வனந்தம்பிழைபுரிந்த சிறியேனெனினும்பொறுத்தாள்வாய், ஐயாசிவகி ரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (உ)

தணியாநெஞ்சக்கயவருடன் றுணையுறவாய்ச்சார்ந்துழனைப், ப ணியாதிருக்கும்பாவியெனைப் பாலித்தடிமைகொளல்வேண்டுங், கணி சேர்கும்பதனக்குறமின் கணவாசுரனைக்காத்தோனே, அணிசேர்சிவகி ரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (ஙு)

முத்தாய்மணியாய்ச்சதுர்மறையின் மூலப்பொருளாய்முளைத்தெழுந்த, வித்தேயமரர்சேனுபதியேவிளங்கும்ஞானவிளக்கொளியே, சத்தாய்செகமீதெவ்வுயிர்க்குந் தானவனுகியசண்முகனே, அத்தாசிவகிரியாண்டவனேயடியேனுந்தனடைக்கலமே. (௪)

மருளேநிறைந்த ப்ரவஞ்சமெனும் வலையைநீக்கியுனதுக்ருபைத, தெருளைக்கொடுத்தாளாதவிடிற் செகமீதிருந்தெவ்விதமுய்வேன், பெருமைப்ரபுவேசண்முகனேபிரியாவெந்தனுயிர்த்துணையே, அருமைச்சிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைககலமே. (௫)

விமலன்றனக்குக்குடிலைதனை விரித்தேயுரைத்தமெய்ப்பொருளே கமலத்தயனைச்சிறையிருத்தி கற்பாந்தமுநற்புகழ்படைத்த, நிமலச்சிற்சுகபூரணனே நீயுமெனையாண்டருள்புரிவாய், அமலச்சிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (௬)

இடர்வந்தென்னைமருட்டுகின்ற தென்செய்வேனுனேழையந்தொடரும்பாசபவமறுத்துத் துறையேயெனையாண்டருள்புரிவாய், குடம்போலிலகுந்தனக்குறமின் கொழுநாகருணைகதித்தோங்கி, யடருஞ்சிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (௭)

மயில்வாகனமீதேநடனம் வழங்குபழனிவளாமுதே, ஓயில்வாரணகேதனகரனே யும்பர்போற்றுஞ்சேனுபதியே, வெயிலோன்பணியும்வரோதயனே வேதவேதாந்தவிளுப்பொருளே, அயிலாசிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (௮)

வானேமகிழவருந்தேனே மனவாக்கெட்டாநிராமயமே, பானேதெய்வமறைமுடிவே பதிதபாவதண்டாயுதனே, திரானேகருணைக்களஞ்சியமே தெவிட்டாவமுதேசின்மயமே, அரனேசிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (௯)

சிரசேசகஸ்த்ரந்தனைப்படைத்த சிங்கமாமுகன்றனைத்தடிந்து,முரசேயண்டசராசரமும் முளைக்கும்வீரப்பிரதாபா, சுரசேகரனேவகண்டாகார சொரூபமானபரம்பொருளே, அரசேசிவகிரியாண்டவனே யடியேனுந்தனடைக்கலமே. (௰)

முற்றிற்று.

## தேவாரம்.

அத்தனேபோற்றியண்டர்க்கதிபனேபோற்றிஞான
முத்தனேபோற்றிமோனமுருகனேபோற்றியெந்தன்
கர்த்தனேபோற்றிசெவ்வேட்கடம்பனேபோற்றியன்பர்
சித்தனேபோற்றியீசன்செல்வனேபோற்றிபோற்றி. (௧)

வேலனேபோற்றிமந்த்ரவிமலனேபோற்றிசூரர்
காலனேபோற்றி திவ்யக்காங்கயாபோற்றிவேத
மூலனேபோற்றிமௌனமுருகனேபோற்றிசூலி
பாலனேபோற்றிதண்டபாணியேபோற்றிபோற்றி (௨)

சேயனேபோற்றிநாதச்சிலம்பனேபோற்றியார்க்குந்
தூயனேபோற்றியோங்குஞ்சோதியேபோற்றிதொண்டர்
நேயனேபோற்றியெங்கும்நிரந்தராபோற்றிவஜ்ர
காயனேபோற்றிவள்ளிகணவனேபோற்றிபோற்றி. (௩)

வேதனேபோற்றிநீடும்வித்தகாபோற்றிசெம்பொற்
பாதனேபோற்றியென்னைப்பயின்றவாபோற்றிநாத
கீதனேபோற்றிமுல்லைக்கிழவனேபோற்றிசாஸ்த்ர
நீதனேபோற்றிசத்யநிஷ்களாபோற்றிபோற்றி (௪)

நாரணன்மருகாபோற்றிஞானபண்டிதனேபோற்றி
காரணகுருவேபோற்றிகதிதருமபரனேபோற்றி
ஆரணமுடிவேபோற்றியமரர்நாயகனேபோற்றி
வாரணத்வசனேபோற்றிவரதனேபோற்றிபோற்றி (௫)

திருவளர்குகனேபோற்றிசெந்தில்வேலவனேபோற்றி
குருமுனிக்கமுதேபோற்றிகுருபரவடிவேபோற்றி
தருவினுக்கரசேபோற்றிசரவணபவனேபோற்றி
வருமலர்மார்பாபோற்றிமாதவாபோற்றிபோற்றி (௬)

மஞ்சினைதவிர்ப்பாய்போற்றிவரந்தரும்பரனேபோற்றி
தஞ்சமுன்பாதம்போற்றிசண்முகநாதாபோற்றி

கஞ்சமாமுகனேபோற்றிகருணையங்கடலேபோற்றி
குஞ்சரிபாகாபோற்றிகுமரனேபோற்றிபோற்றி (௭)

சந்திரவதனாபோற்றிசகதலமகிபாபோற்றி
மந்தரப்பொருளேபோற்றிமஞ்ஞைவாகனனேபோற்றி
சுந்தரபரனேபோற்றிதுகளிலாவடிவேபோற்றி
இந்திரர்க்கரசேபோற்றியிறைவனேபோற்றிபோற்றி (௮)

மனப்படியெனக்குநல்லவரம்புரிந்தாள்வாய்போற்றி
தினைப்புனங்காக்கும்வள்ளிதினந்தொழுமமுதேபோற்றி
சினப்படையவுணர்தம்மைச்சிதைத்திடும்பரனேபோற்றி
வினைப்பவந்தவிர்த்தாட்கொள்ளும்வேலனேபோற்றிபோற்றி (௯)

கயிலையம்பதிவாழ்திவ்யகருணைப்ரவாகாபோற்றி
சயிலகாரணனாய்வந்தசண்முகானந்தாபோற்றி
மயின்மிசைநடனமாடும்மாதவப்பொருளேபோற்றி
அயிலினைக்கரத்திற்கொண்டவையனேபோற்றிபோற்றி (௰)

———*———

## வாழி.

### இரட்டைஆசிரியவிருத்தம்.

சீர்கொண்டசந்திரசடாநநமும்வாழிநற்
றிடமந்த்ரதோளும்வாழி
சேவலங்கொடியுமரகதமயிலும்வாழிபொன்
செங்கைவடிவேலும்வாழி
வார்கொண்டகும்பதனமங்கைகுறவள்ளிதெய்
வானையிருமாதர்வாழி
மௌனகுறுமுனிவனொடுநற்கீரனருணகிரி
வளரும்விண்ணாடர்வாழி
கார்கொண்டகடல்வாழிபுவிவாழிபலகலைக்
கவிராஜநாவலரும்வாழி

கருதரியநால்வேதவாகமபுராணமொடு
கனசைவசமயம்வாழி
ஏர்கொண்டபழனிநகர்வாழிசெந்தமிழ்வாணி
யிருபதாம்புயமும்வாழி
இன்போடுபடித்துமுருகன்பஜனைசெய்வோர்க
ளெந்நாளும்வாழிதானே.

ஞானரசகவிதாமஞ்சரி

முற்றிற்று.

முற்றும்.